"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2008




## "சிறு தெய்வம் சேர்வோமல்லோம்"

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்



தரமான தங்கத்திற்கு
இலண்டனிலே சிறந்த இடம்
LAKSHMIS JEWELLERS
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

மணி 16 **கலசம் KALASAM** ஒலி 60

www.smsuk.info
E-mail: kalasam @ gmail.com

# கலசம் 60

உங்கள் கைகளிலே அறுபதாவது கலசம் இதழ் தவழ்கின்றது. பலருடைய முயற்சியாலும் பலன்கருதாப் பங்களிப்பாலும் இந்தச் சஞ்சிகை தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது. வாசகரின் ஆதரவு, விடயங்கள் தருவோரின் பங்களிப்பு, விளம்பரதாரரின் பொருளுதவி, வாசன் அச்சகத்தினரின் தொழில்நுட்பம் என முதலாவது இதழிலிருந்து இன்றுவரை இது தொடர்கிறது; தொடரும். சைவசமயம், வழிபாட்டு முறை என்று பல விடயங்கள் பற்றிப் பலருக்கும் சந்தேகங்கள் வருவதுண்டு. அவற்றுக்கு விடை காணும் முயற்சியே கலசத்திலே வரும் ஆக்கங்கள். சைவ சித்தாந்தக் கொள்கைக்கு அமைய கலசம் கருத்துக்களைத் தயங்காது தரும். கலசம் உங்கள் களம். அதைப் பயன்படுத்துங்கள்.

கலசத்தின் கர்த்தாவாக இருப்பது சைவ முன்னேற்றச் சங்கம். சமயக் கருத்தினூடு மக்கள் சேவை செய்வது சங்கத்தின் நோக்கம். இவ்வருடம் சங்கம் முப்பத்தொரு ஆண்டுகள் சேவை செய்து முப்பத்திரண்டாவது ஆண்டிலே காலடி வைக்கிறது. சங்கத்தின் சேவைகளாற் பலர் பயனடைந்துள்ளார்கள். வீட்டு வழிபாட்டில் கூட்டுவழிபாடு செய்துவந்த சங்கம் இன்று சிறுவர் கல்வி, அறிவொளி வட்டம், இளைஞர் தொண்டர்குழு, இறுதிக் கிரியைகள் எனத் தன் சேவைகளைப் பெருக்கிக்கொண்டுள்ளது. இவ்வாண்டு வழிபடவெனச் சிவகாமி அம்பாள் உடனுறை சிதம்பரேஸ்வரரையும் மண்டபத்திலே தாபித்துள்ளது.

இளைஞர் தொண்டர் குழு சங்கத்தின் பணிகளிலே தம்மை ஈடுபடுத்தி வருகிறார்கள். அண்மையில் நவராத்திரி விழாவை அவர்கள் சிறப்பாகக் கொண்டாடினர். விஜயதசமியன்று சங்க வழிபாட்டு மண்டபத்திலே கலை நிகழ்வுகளை ஏற்பாடு செய்திருந்தனர். பாட்டு, வீணை, நடனம், சொற்பொழிவு நிகழ்ச்சிகள் நடந்தன. அடுத்த சந்ததியின் செயல்கண்டு சங்கம் பெருமை அடையலாம்.

முப்பத்தொரு வருடங்களையும் அறுபது இதழ்களையும் கடந்துவிட்டாலும் உங்கள் ஆதரவு உள்ளவரை சங்கமும் அதன் சஞ்சிகையான கலசமும் தொடர்ந்து உங்களுக்குச் சேவை செய்துவரும். "எம் கடன் பணி செய்து கிடப்பதே!". நன்றி. வணக்கம்.

\- ஆசிரியர்

## நிர்வாகக் குழு

திரு. க. ஜெகதீசுவரன் (ஆசிரியர்) திரு. ச. ஆனந்ததியாகர் திரு. சி. அற்புதானந்தன் திரு. சி. தம்பு
திரு. சு. வைத்தியநாதன் திரு. வ. இ. இராமநாதன்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# இந்த இதழில்


| | |
|---|---|
| தங்குமோ | 03 |
| அப்பூதியடிகள் - பெரியபுராணத் தொடர் | 05 |
| வியந்தோம் விதந்தோம் - பிச்சைக் குருக்கள் | 07 |
| சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம் | 08 |
| தந்தையாரின் கடமைகளில் ஒன்று - கந்தபுராணச் சிந்தனைகள் | 09 |
| குரு | 12 |
| புறநானூறும் வேதமும் | 14 |
| நால்வர் பிறப்பிடங்களும் விடுபெற்ற தலங்களும் | 16 |
| காயத்திரி மந்திரம் | 18 |
| மனிதவாழ்வில் ஜோதிடம்.... | 22 |
| உங்கள் கருத்துக்கள் | 23 |
| நல்லை நகர் ஆறுமுக நாவலர் | 25 |
| சடாமுடியில் ஓர் ஓவியம் | 26 |
| எழுத்துப் பிழை அற.... | 27 |
| திருக்குறள் | 28 |
| கர்நாடக இசையில் தமிழ் பாடலாசிரியர்கள் | 30 |
| வழிபட நேரமில்லை?! | 33 |
| To Eat or Not to Eat Meat | 36 |
| ஸ்ரீ பகவதி அம்பாள் கோயில்-கேரளபயணக்கட்டுரை | 39 |
| விநாயகர் அகவல் | 46 |
| சிறுவர் கலசம் | 51 |

# தங்குமோ?

க.உமாமகேசுவரன்

## பாதம் தங்குமோ? இது கேள்வி இலக்கம் ஒன்று
## வினை தங்குமோ? இது கேள்வி இலக்கம் இரண்டு

**சக்தி** உபாசகனான பாரதியைத் தாங்கொணா ஏக்கமொன்று பிடித்தாட்டுகின்றது. அவன் தன் ஏக்கத்தைப் பராசக்தியின் நாம ரூப பேதங்களில் ஒன்றாய் விளங்கும் கலைமகள் பாதங்களிலே சமர்ப்பிக்கின்றான்.

'அணுக்கள் சுழல்கின்றன. கோள்களும் சுழல்கின்றன. இப்படி இடையீடின்றி ஒரே நிகழ்வினில் ஊன்றி நிலைப்பது உலகில் உள்ள பொருள்களின் இயற்கையாயின், எனதுள்ளமும் சதா நினது அருளிலே சலியாது திளைக்க வேண்டுமே; திளைக்கவில்லையே; திளைக்கலாகாதா?'

இடையின்றி அணுக்களெலாம் சுழலுமென இயல்நூலார் இசைத்தல் கேட்டோம்
இடையின்றிக் கதிர்களெலாம் சுழலுமென வானூலார் இயம்பு கின்றார்
இடையின்றித் தொழில்புரிதல் உலகினிடைப் பொருட்கெல்லாம் இயற்கை யாயின்
இடையின்றிக் கலைமகளே நினதருளில் எனதுள்ளம் இயங்கொ ணாதோ.



சகலகலா வல்லியைத் துதிக்க ஆரம்பிக் கிறார் குமரகுருபரசுவாமிகள். எடுத்த எடுப்பிலேயே தம்முடைய ஏக்கமொன்றை அவரும் புலப்படுத்திவிடுகிறார்.

'வெள்ளைத் தாமரை ஒன்றுக்கு மட்டுந் தானா, சகலகலா வல்லி! நின்திருவடிகளைத் தாங்கும் தகுதியும், பேறும். ஏன் என் வெள்ளை உள்ளத்தாமரைக்கு அதற்கான தகுதி சிறிதும் இல்லையா!'
வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளை யுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ!

என்றிப்படிச் 'சகலாகலாவல்லி மாலை' யின் முதற் பாடலிலேயே தமது ஏக்கத்தை புலப்படுத்திய சுவாமிகள் தொடர்ந்து ஐந்தாவது பாடலிலும் அதே ஏக்கத்தை வெளியிடுகிறார்.

**நவராத்திரி சிறப்புக்கட்டுரை**

'செம்பஞ்சுக் குழம்பு தீட்டி அழகு மிளிரும் நின் பாதங்கள் பங்கேருகம் (தாமரை) என்றால், குளம் வேண்டுமே அவை அலர்வதற்கு. என்நெஞ்சாகிய தடம் (குளம்) தான் இருக்கிறதே. ஏனிவை அங்கே அலரவில்லை?'

'பஞ்சப்பி தந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே'

இறைவியினுடைய திருவடிகளைச் சதா தியானிக்க முடியவில்லையே! சிந்தையை அடக்கிச் சும்மா இருக்க முடியவில்லையே! என்பது தான் இவர்களின் தீராத ஏக்கம்.
'கலை மடந்தையின் திருப்பாதங்கள் மென்மையானவை. தேன் வண்டுகள் சூழ்ந்து இன்னிசை பாடும் அன்றலர்ந்த மென்மலர்மீது பட்டாலே அவை கன்றிச் சிவந்து விடும். அங்ஙனமானால், 'பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்' இயல்பினர் மனத்தே - மெய்யேயிலா வன்மனத்தே - அவை வந்து தங்குமோ?' என்கிறார் இடைப்புகுந்து விட்ட பெயர்கூற விரும்பாத புலவர் ஒருவர்.

என்னை உடையாள் கலை மடந்தை எவ்வுயிர்க்கும்
அன்னை உடைய அடித்தளிர்கள் - இன்னளிசூழ்
மென்மலர்க்கே கன்றும் எனஉரைப்பர் மெய்யிலா
வன்மனத்தே தங்குமோ வந்து.

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகித் தூய்மையுறாதவரை இறை சாந்நித்தியம் இதயத்திலேற்பட வாய்ப்பே இல்லை என்பதையே இந்தப் புலவரும் வலியுறுத்துகிறார். அப்படியானால் நெஞ்சக்கனகல்லை நெகிழ்த்துவதுதான் எப்படி? அதற்கான மார்க்கம் ஆலய வழிபாடும், திருமுறை ஓதுவதுந்தான் என நாயன்மார் நால்வரும் தமது வாழ்வாலும் வாக்காலும் காட்டியுள்ளார்கள். திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் திருக்கரவீரம் என்ற தலத்தில் எழுந்தருளும் சங்கரன் சந்நிதியில் நின்று துதிக்கிறார்.

தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்திக ழும்கர வீரத்தம்
சங்க ரன்கழல் சார[1]வே.

ஞானசம்பந்தப்பெருமான் 'தங்குமோ வினை........ சங்கரன் கழல் சார?' என்று கேட்கிறார். சங்கரன் பாதங்களை இடைவிடாது நினைக்க - தியானிக்க - தீவினை நம்மிடத்தே வந்து தங்கி நம்மைத் துயருறுத்தத் துணியுமோ; தங்குமோ? என்பதுதான் அவர் கேள்வி.

1 'சேர்தல்', 'சார்தல்' என்ற சொற்கள் ஒத்த பொருளிலும் வரும். வேறு வேறு பொருள் குறித்தும் வரும். 'சேர்தல்' என்ற சொல்லுக்கு 'இடைவிடாது நினைத்தல்' என்றும் ஒரு பொருள் (குறள்.3 பரிமேலழகர் உரை) உண்டு. அப்படியானால், ஒத்த பொருளில் வரும் 'சார்தல்' என்ற சொல்லின் குறையாய் இங்கே சம்பந்தசுவாமிகள் வாக்கிலே வரும் 'சார' என்பதற்கும் மிகமிகப் பொருத்தமான அப்பொருளைத் தானே கூறவேண்டும்.

# அப்பூதியடிகள்

மூ.சிவராசா

எந்தச் சமயச் சார்புள்ளவர்களும் தாம் பெற்றெடுக்கும் பிள்ளைக்கு தாம் வணங்கும் கடவுளின் பெயரை வைக்கிறார்கள். சிலர் தம்மை வழிப்படுத்தும் குருவின் பெயரைச் சூட்டுகிறார்கள். காரணம் பிள்ளையைப் பெயர் சொல்லி அழைக்கும்போதெல்லாம் கடவுளின் அல்லது குருவின் நினைவு இருப்பினும் இல்லையானாலும், அவர் நாமத்தை ஜபிப்பதாகுமே என்பது. "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்றுதானே சுந்தரர் அருளினார்! இறைவன் நாமத்தை நினைப்பதும், உச்சரிப்பதும், கேட்பதும் மூலமாக ஒருவர் அவனை வணங்குகிறார்.

மகாபாரதத்தில் ஏகலைவன் என்னும் வேடன் துரோணாசாரியரிடம் சீடனாக அமர்ந்து வில்வித்தை கற்கவந்தான். அது முடியாமற் போகவே, அவர் ஆசியோடு அவர்போன்ற தொரு வடிவம் செய்து அதன் முன்பாக வில்வித்தை பயின்றதும், பின் அவர் நேரில் வந்தபோது தன் வலது கைப் பெருவிலையே அறுத்துக் குருதட்சணையாகக் கொடுத்ததும் நாம் அறிந்ததே. குரு உபதேசமோ குரு பக்தியோ குருவின் முன்னிலையிலேதான் பிரகாசிக்கவேண்டும் என்பதில்லை. இன்றும் சிவயோகசுவாமிகளையோ, காஞ்சிப்பெரி யவர்களையோ நேரிலே தரிசிக்காத எண்ணில் அடங்காத மக்கள் இவர்களைத் தங்கள் குருவாகக் கொண்டு வழிபவடுவது கண்கூடு.

பெரியபுராணத்திலே போற்றப்படும் நாயன் மார்கள் குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் யாதாயினும் ஒன்றன்வழி நற்கதி பெற்றவர்கள். இவர்களுட் குரு வழிபாட்டால் முத்திபெற்ற பன்னிரு பேர்களுள் அப்பூதியடிகள் நாய னாரும் ஒருவர். திருநாவுக்கரசு சுவாமிகள் சமணர்கள் இழைத்த கொடுமைகள் யாவற்றையும் சிவன் அருளாற் புறங்கண்டார் என்பதைக் கேட்டறிந்த அளவில், அவரின் வழிகாட்டுதலைப் பின்பற்றித் தாமும் கடைத் தேறலாம் என்று உறுதி கொண்டிருந்தவர், அவரையே தனது மானசிகக் குருவாகக் கொண்டு தாம் செய்து வந்த தர்மசாலைகள், தண்ணீர்ப் பந்தர்கள், பூங்காக்கள், குளங்கள் போன்றவற்றுக்கெல்லாம் தன்பெயரைச் சூட்டாமல், நாவரசர் பெயரையே சூட்டினார். அம்மட்டோ, தமது மாடு, மனை, மக்கள் எல்லாமே நாவரசர் பெயரையே தாங்கச் செய்தார். அப்பர் பெருமானைத் தரிசித்த அநுபவம் இல்லாமலே அவர்பாற் கொண்ட அதீத பக்தி காரணமாக இவ்வாறு நடந்து கொண்ட அப்பூதியடிகள் திங்களூர் என்னும் தலத்தில் அவதரித்த அந்தணர். நாவரசர் தலயாத்திரை மேற்கொண்டு திருப்பழனம் பணிந்தபின் திங்களூருக்கு வந்தார். ஓரிடத்தில், தண்ணீர்ப் பந்தர் ஒன்று தமது பெயரிலே திகழ்வதைக் கண்டு அருகு நின்றவர்களை, 'இந்தப் பெயரில் இத் தண்ணீர்ப் பந்தரை செயற்படுத்துபவர் யார்?' என விசாரித்தார். அவர்கள் அப்பூதியடிகள் என்று கூறி அவரது வீட்டுக்கு வழியும் காட்டினர். அங்கு சென்ற நாவரசரை யாரென அறியாத அப்பூதியடிகள் அவர் ஒரு சிவன டியார் என்றுமட்டுமே கருதி வரவேற்று வணங்கினார். எதிர் வணக்கம் செய்த நாவுக் கரசர் சம்பாஷணையின் இடையில் அப்பூதி யடிகள் ஏற்படுத்தியுள்ள தர்ம நிலையங் களுக்குத் தன்பெயரைச் சூட்டாது வேறு ஒரு பெயரைச்சூட்டியது ஏன் என்று கேட்டார். "வேறு ஒரு பெயர்" என்ற சொற்றொடர் அப்பூதியடிகளின் உள்ளத்தை உறுத்தியது. "அமண் செய்த சூழ்ச்சிகள் யாவற்றையும் திருத்தொண்டின் உறைப்பாலே வென்றவர் திருப்பெயரோ வேறொரு பெயர்? பொங்குகடல் கல்மிதப்பில் போந்தேறும் அவர் பெருமை உலகமே அறியுமே! சிவவேடம் தரித்துள்ள தாங்களா இவ்வாறு கேட்பது!

தாங்கள் யார், எங்கிருந்து வருகிறீர்கள்" என்று பொங்கினார் அப்பூதியடிகள். அமைதியாகப் பதிலளித்த சுவாமிகள் "அமண்சமயத்திலிருந்து கரையேறும் பொருட்டுச் சூலைநோயால் ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யான்" என்றார். இதைக்கேட்ட அப்பூதிடிகளின் கைகள் தலைமேற் குவிய, கண்களில் நீர் பெருக, உரைகுழற நாவரசர் பாதங்களில் விழுந்து வணங்கினார். அந்நிலையில் அவர் கொண்ட ஆனந்தத்துக்கு அளவே இல்லை. மனைவி மக்களையும் அழைத்து, வந்துள்ளவர் நாவரசர் பெருமானே என அறிவித்து, வணங்கச்செய்தார்.

தம் இல்லம் தேடி வந்த அப்பர் சுவாமிகளுக்குத் திருவமுது செய்விக்க வேண்டி உள்ளே அழைத்துச் சென்றார். மனைவியார் உணவு தயாரித்தார். மகன் மூத்ததிருநாவுக்கரசு என்பானை வாழைக்குருத்து அரிந்து வரும்பொருட்டுத் தோட்டத்துக்கு அனுப்பினார். சென்றவன் குருத்து அரியும்போது பாம்பினாற் கடிபட்டான். விஷம் தலைக்கேறுமுன் வாழைக் குருத்தைத் தாயின் பக்கத்திற் போட்டு, வீட்டு வாசலில் விழுந்தான்; உயிர் நீத்தான். நிலமை உணர்ந்த பெற்றோர் மகனின் சாவு காரணமாக நாவரசர் பெருமான் திருவமுது செய்தல் தடைப்படுமே என்று தம் துக்கத்தையும் அடக்கிக்கொண்டு சவத்தை ஒரு பாயிற் சுருட்டி வீட்டின்புறத்தே மறைத்து வைத்தனர். சுவாமிகளை அமர்த்தி உணவு பரிமாறினர். அந்நேரம் நாவரசர் யாவருக்கும் விபூதிவழங்கி "மூத்ததிருநாவுக்கரசையும் அழையுங்கள் விபூதி தரலாம்" என்றார். விவரம் தெரிந்தால் விளைவு என்னாகும் என உணர்ந்த அப்பூதியடிகள் "அவன் இப்போது இங்கு உதவான்" எனக் கூறினார். இவ்வார்த்தை சுவாமிகள் மனத்திலே தடுமாற்றத்தை ஏற்படுத்த உண்மையைக் கூறும்படி அப்பூதியடிகளை வற்புறுத்தினார். அவரும் அனைத்தையும் சொன்னார். "நன்று நீர் புரிந்த வண்ணம், யாவர் இத்தன்மை செய்வார்" என்ற நாவரசர் சவத்தை நோக்கி "ஒன்று கொலாம்" என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்ய மாண்டவன் உயிர் பெற்றெழுந்தான். மகனின் சாவினால் நாவரசர் அமுது செய்தல் தடைப்பட்டதே என்று சிந்தை நொந்த அப்பூதியடிகள் குடும்பம் மகிழுமாறு எல்லோருடனும் கூடிச் சுவாமி திருவமுது செய்தார்.

தொடர்ந்து சில நாள்கள் திருநாவுக்கரசு பெருமானார் அப்பூதியடிகள் இல்லத்திலே தங்கியிருந்த பின்னர் திருப்பழனம் சென்றருளினார். அப்பூதியடிகள் இவ்வாறே அரசின் பாதம் போற்றியிருந்து இறைவன் பொற்பாதம் அடைந்தார். அவர்தம் புத்திரனின் மரணத்தால் ஏற்பட்ட சோகத்தையும் அடக்கி அப்பருக்கு அமுதூட்டத்தவறுமே என்று வருந்திய நிலையைச் சேக்கிழார் இவ்வாறு வரைகிறார்.

பெரியவர் அமுது செய்யும்
பேறிது பிழைக்க வென்னோ
வருவதென் றுரையா ரேனும்
மாதவர் வினவ வாய்மை
தெரிவுற உரைக்க வேண்டும்
சீலத்தாற் சிந்தைநொந்து
பரிவொடு வணங்கி மைந்தர்க்கு
உற்றது பகர்ந்தார் அன்றே.

ஒருவர்: அப்பூதியடிகளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மற்றவர்: நல்லவேளை அவர் இப்போ பிறக்கவில்லை.

ஒருவர்: ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

மற்றவர்: இந்தக் காலத்தில் எல்லாரும் மற்றவர் காசில் தருமம் செய்து விட்டுத் தன்பெயரை நிலை நாட்டுகிறார்கள். இவர் தன் காசிலே தருமம் செய்துவிட்டு மற்றவர் பெயரையல்லவா வைத்திருக்கிறார்!

# வியந்தோம், விதந்தோம்!



கடந்த 2008, செப்டெம்பர் மாதம் ஐந்தாம் ஆறாம் நாள்களில் மணிவிழா கண்டவர் சிவஸ்ரீ பிச்சைக்குருக்கள் அவர்கள். மக்கள் கூட்டம் அலைமோத, குருக்கள் அவர்களின் அறுபது அகவை நிறைவு கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

அறுபது ஆண்டுகளிலே அவர் செய்த வற்றைப் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகின்றது.

நாற்பது ஆண்டுகளாகப் பிள்ளையார் பட்டியிலுள்ள கற்பகவிநாயகர் கோயிலிலே பிரதம சிவாசாரியார் பதவி.

கடந்த இருபத்தெட்டு ஆண்டுகளாக வேத சிவாகம பாடசாலை நடத்துவது

சைவ சித்தாந்த நூல்களை வெளியிடுவது

தேவாரத் திருமுறைகளை ஓத ஊக்குவிப்பது, வேதாகம திருமுறை கருத்தரங்கங்கள் நடத்துவது

தமிழ்நாட்டிலும் உலகின் பல்வேறு நாடுகளிலும் பண்போடும் பத்தியோடும் பணியாற்றும் சிவாசாரியர்களைப் பயிற்றியது

கிராமக் குழந்தைகள் கற்க பாடசாலை அமைத்தது, ஏழை மாணவர் கற்க உதவுவது

தமிழ்மொழி, வடமொழி இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கமளிக்க உதவுவது

இலவச மருத்துவமுகாம் நடத்துவது, மகப்பேறு சமயத்தில் தாய்மார் மருத்துவ உதவி பெற வசதியாக வாகனவசதி, மருதங்குடியிலே மருத்துவ கட்டடம் அமைத்து மருத்துவமனை வசதியை அதிகரித்தது, புற்றுநோய் மையத்துக்கு நிதியுதவி அளித்தது.

பிள்ளையார்பட்டி திருக்கோயிலிலே பணியாற்றும் பணவசதி குறைந்தோருக்கு வீடுகட்ட நிலவசதி செய்தது

மாணவருக்குகக் கணினி வகுப்பு, யோகப்பயிற்சி வகுப்பு ஆகியவை நடத்த ஏற்பாடுசெய்தது

உலக நாடுகள் பலவற்றிலும் கோயில் கும்பாபிஷேகம் நடத்தியது

இப்பணிகள் மேலும் பல்லாண்டுகள் தொடர – சிவாசாரியர் அவர்களும் அவரின் குடும்பத்தினரும் சிறப்புடன் வாழ – கலசம் கற்பகவிநாயகரை வேண்டி நிற்கிறது.

# "சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்"

**-அநுராதா-**

சைவசமயத்தின் நான்கு தூண்களாக இருப்பவர்கள் நம் சமயகுரவர்கள் நால்வர். அந்த நால்வரோடு ஏனைய அருளாளர்களான திருமூலர், நக்கீரர், பட்டினத்தார், அருணகிரியார், காரைக்கால் அம்மையார் போன்ற இறையருள் பெற்று அருட்பாடல்கள் பாடிய எவருமே சிறுதெய்வ வழிபாட்டை ஏற்றதில்லை. ஆனால், தற்பொழுது சில காலமாக எதையும் வழிபடலாம், எவரும் மந்திரம் சொல்லலாம், எல்லாம் ஒன்று என்றொரு கருத்துப் பரவி வருகிறது. குரு என்றும் ஆன்மிக சொற்பொழிவாளர் என்றும் இருப்போரே இக்கருத்தைப் பரப்புவது மிகவும் வேதனைக்குரியது. இவர்கள் மக்களை மகிழ்விப்பதற்காக இக்கருத்துக்கள் பிழையென்று தெரிந்தும் ஆதரித்துப் பேசிவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம்,

'யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வம் ஆகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்'

ஆகவே நீங்கள் யாரையும் வழிபடலாம் என்பது. சிவஞானசித்தியாரில் வரும் இப்பாடலில் மீதியை அவர்கள் சொல்வதில்லை. அந்தப் பாட்டின் மீதிப் பகுதிதான் முக்கியமானது. அது இதோ!

'..........மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல் வினையுஞ் செய்யும்
ஆதலின் இவையி லாதான் அறிந்தருள் செய்வ னன்றே'

பிறப்பு, இறப்பு இல்லாதவன்தான் இறைவன். நமக்கு அருள்கொடுப்பவன் நம்மைப்போலவே பிறந்து, இறந்து, வேதனைகளை அநுபவிப்பவன் என்றால் எப்படி அவன் நம் கடவுளாகலாம்?

**தற்பொழுது சில காலமாக எதையும் வழிபடலாம், எவரும் மந்திரம் சொல்லலாம், எல்லாம் ஒன்று என்றொரு கருத்துப் பரவி வருகிறது. குரு என்றும் ஆன்மிக சொற்பொழிவாளர் என்றும் இருப்போரே இக்கருத்தைப் பரப்புவது மிகவும் வேதனைக்குரியது.**

மாணிக்கவாசகரோ அச்சப்பத்து என்ற பதிகத்தில் 'புற்றில்வாழ் அரவும் அஞ்சேன்' என்கிறார். பாம்புக்கே பயப்படாத அந்த அருளாளர் தாம் பயப்படுவது யாருக்கென மிகத் தெளிவாக அடுத்து வரும் அடிகளிலே அழகாகக் குறிப்பிடுகிறார். 'மற்றுமோர் தெய்வந் தன்னை உண்டென' நினைப்பவர்களையும் 'இருவரால் மாறுகாணா எம்பிரான் தம்பிரானாம் திருவுரு அன்றி மற்றோர் தேவரை' நினைப்பவர்களையும் கண்டு அஞ்சுவேன் என்கிறார் அவர்.

திருப்பல்லாண்டிலேயும், 'சில்லாண்டிற் சிதையும் சிலதேவர் சிறுநெறி சேராமே' என்பார் சேந்தனார்.

திருநாவுக்கரசரை அழைத்து வரும்படி மன்னன் ஆணையிட, அழைக்கவந்த அமைச்சருக்கு நாவுக்கரசர் தாம் வரமுடியாது என்று பதிலாகப்பாடிய மறுமாற்றத் திருத்தாண்டகத்திலே,
'சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்' என்பர்.

குருவாக நம் சமயகுரவர் நமக்கிருக்க, வேறு குருவைத்தேட வேண்டுமா? சென்று நாம் சிறுதெய்வம் சேரத்தான்வேண்டுமா?

# தந்தையாரின் கடமைகளில் ஒன்று

**(கந்தபுராணச் சிந்தனைகள்)**

சிந்திப்பவர் Dr சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருக்கச் செயல்"

என்று திருக்குறள் கூறுகிறது. இது முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டது. ஆனால், வாழ்க்கை தனியே முன்னேற்றத்தை மாத்திரம் கொண்டதல்ல. முன்னேறியவர்கள் பிழையான காரியங்களைச் செய்து பழி கேட்பதும், படு தோல்விகளையும், அவமானங்களையும் சந்திப்பதும் சகஜம். இவ்வாறான நேரங்களிலே, சிந்தனை சரியாகச் செல்லாது. எவ்வாறு அத் தோல்விகளிலிருந்து விடுதலை பெறுவது என்பதும் தோன்றாது. கந்த புராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரத்திலே, இவ்வாறான நேரங்களிலே, தந்தையார் முன்வந்து மைந்தரை நெறிப்படுத்துவது அவர்களின் தலையாய கடனாகக் காட்டப்படுகிறது. "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்ற முதுமொழி கூட இதனாற்றான் ஏற்பட்டதோவெனச் சிந்திக்கத் தோன்றுகிறது. கந்தபுராணம் காட்டும் இரண்டு சம்பவங்களைப் பார்ப்போம்.

## முதற்சம்பவம் - காசிபன் குழப்பம்

பிரம்மதேவரின் மகன் காசிபர். அவர் பெருந்தவம் செய்து வல்லமை பொருந்திய முனிவராகத் திகழ்கின்றார். சுக்கிராசாரியாரின் ஏவுதலின்படி மாயை அவர் முன் மிகவும் அழகிய ஒரு பெண்ணாக உருக்கொண்டு போய் அவரை மயக்குகிறாள். அவளிடம் மயங்கிய காசிபர் தன்னுடைய தவநிலையைக் கைவிட்டுத் தன்னிலையினின்றும் இழிந்து அவள் வசமாகிறார். இவ்வாறு காமத்தின் வசப்பட்ட காசிபர் "நான் பல காலம் பல பெரியதவங்களைச் செய்ய எண்ணியிருந்தது வீட்டு இன்பம் அடைவதற்கே ஆகும். ஆயினும் அந்த வரத்தை எனக்குத் தர வந்தாய். உன்னைச் சேர்வதன்றோ உயர்ந்த வீடுபேறு?" என்று சொல்கிறார்.

> பன்னெ டுந்தவம் பற்பகல் ஆற்றியான்
> முன்னி நின்றது முத்திபெற் றுய்ந்திட
> அன்ன தேஎற் கருள்செய வந்தனை
> உன்னை மேவலன் றோஉயர் முத்தியே
>
> மாயைப் படலம் 76

தவம் செய்துகொண்டிருந்த காசிபரிடம் போய் மாயை, இவ்வாறு மாற்ற இயலாத மயக்கத்தை உண்டாக்கி, அவரை இழிவாய நிலைக்குத் தள்ளியதைக் காணச் சகிக்காத சூரியன் மறைந்து விடுகிறான். மோகம் கொண்ட காசிபர் மாயையுடன் கூடுகிறார். அந்தக் கூடலின் பயனாகச் சூரபன்மனும், தம்பிமார் சிங்கமுகாசுரனும், தாரகாசுரனும் தங்கை அசமுகியும் உற்பத்தியாகின்றனர். இரவு முடிந்ததும், பிள்ளைகள் பெற்றோரை வணங்கிப் புத்திமதி கேட்கிறார்கள். காசிபரின் உபதேசத்தைக் கேளாது சிவபெருமானை நோக்கிப் பெரும் யாகங்கள் செய்து பெரிய வரங்களைப் பெறுகவென அனுப்புகிறாள் மாயை. அதன் பிறகு மாயை தான் போவதாகக் காசிபரிடம் சொல்லிவிட்டுப் போய் விடுகிறாள். மாயையோடு அவள் கொணர்ந்த ஏனைய பொருள்களும் போய்விடுகின்றன. பொய்கைகளும், தடாகங்களும், செய் குன்றுகளும், மற்றவையும் தேவரும் விரும்பும் அதிசயப்பொருள்களுமாகிய எல்லாவற்றையும் காணாமல் உயிரற்ற உடலையுடையவர் போலக் காசிபர் வருந்திக் கலங்கினார். உய்நெறி தெரியவில்லை. அந்த நேரத்திலே "தாமரை

மலரில் வீற்றிருக்கும் தந்தையான பிரம்மதேவர், தன் ஞான உணர்வினால் தம்மைந்தரான காசிபமுனிவரின் துன்பத்தை உணர்ந்து வான் வழியாய் வந்து சேர, "என் தந்தை வந்தார்'' என்று காசிபர் எழுந்து வணங்கினார்.

மைந்தன துறுதுயர் மலரின் மேவிய
தந்தைதன் உணர்வினால் தகவின் நாடியே
அந்தர நெறியில்வந் தங்கண் மேவலும்
எந்தைவந் தனன்கொலென் றெழுந்து தாழவே
மாயை நீங்கு படலம் 7

வணங்கிய மைந்தனைப் பார்த்துப் பிரம்ம தேவர் "காசிபனே! அரிய தவத்தைச் செய்யாது விட்டு, மனம் வருந்துதற்குரிய காரணத்தைக் கூறுவாயாக'' என்று கேட்கிறார். காசிபர் தன் துன்பத்தைச் சொல்கிறார். மைந்தன் சொன்னவற்றைக் கேட்ட பிரம்மதேவர், வெட்கமடைந்தாலும் சீறவில்லை. மைந்தனுடைய மனம் ஏற்றுக் கொள்ளுமாறு தேற்றுகிறார். காமத்தின் தீமையைப் பற்றிச் சொல்லி, மைந்தனின் திறமைகளையும் சொல்லித் தட்டிக் கொடுக்கிறார்.

'வேதங்களையும் மற்றக் கலைகளையும் அறிந்து சிறந்த பேரறிவுடையனே! நீ ஒரு பெண்ணின்பொருட்டு மயக்கமடைந்து அறியாமை உடைய மானுடனைப்போல் வருந்தலாமோ?' என்று கேட்கிறார். இவ்வாறு பலவற்றையும் சொல்லித்தேற்றியபின், மாயை யால் நீயும் இப்பிழையை விட்டிருக்கிறாய். அதினின்றும் நீங்க நீ முன்னரைப்போலத் தவம் செய்வாயாக என்று சொல்லி நல்வழிப்படுத்துகிறார்.

நிகர் இல்லாத நான்முகனின் சொல்லைக் கேட்ட காசிபமுனிவர், காமநோய் நீங்கி, மனம் தெளிவுகொண்டு, அவளுடன் கூடிய பாவமானது நீங்குமாறு, எருதை வாகனமாகக் கொண்ட சிவபெருமானை மனதிலே துதித்துப் பெருமையுடன் தவத்தைச் செய்தார்.

மாறகல் நான்முகன் வாய்மை தேர்தலுந்
தேறினன் மையல்நோய் தீர்ந்து காசிபன்
ஏறமர் கடவுளை இதயத் துன்னியே
வீறொடு நோற்றனன் வினையின் நீங்குவான்

மாயை நீங்கு படலம் 15

இவ்வாறாக மைந்தனான காசிபர் நெறி தவறி நிலை குலைந்த நேரத்திலே தந்தையாரான பிரம்மதேவர் தோன்றி மகனுக்கு ஆதரவு கொடுத்து நன்னெறிப்படுத்தினார்.

## இரண்டாம் சம்பவம் - தக்கன் வீழ்ச்சி

பிரம்மாவின் புத்திரர்களுக்குப் பிரம்மா அறிவுரை வழங்கினார். சிவபெருமானை வணங்கிச் சகலதையும் பெற முடியுமென அவர் உபதேசித்தார். அவருடைய உபதேசத்தைக் கேட்ட அவருடைய மகனான தக்கன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்தான். அவன் தன்முன் தோன்றிய சிவபெருமானிடம் பல வரங்கள் பெற்றான். பார்வதிதேவியைத் தன் மகளாய்ப் பெற்றான். இறைவன் பார்வதியைத் திருமணம் செய்ய வந்தபோது குழப்பம் ஏற்பட்டது. கோபமுற்ற தக்கன் சிவனை மதிக்காமல் பெரும் யாகம் செய்தான். யாகம் வீரபத்திரக் கடவுளால் அழிக்கப்பட்டது. தக்கன் தலை வெட்டப்பட்டு இறந்தான். பார்வதியின் வேண்டுகோளினாற் சிவன் தக்கனை ஆட்டுத் தலையுடன் உயிர் பெறச் செய்தார். இவ்வாறு பேரழிவும் இழிவும் உற்ற தக்கனுக்கு முன்னே தந்தையார் பிரம்மதேவர் வந்து சொன்னார், 'மகனே! நீ முன்பு என்னிடம் எதனைக் கற்றாய், கற்றபின் எதனை முயன்று செய்தாய், அதனால் எதை அடைய எண்ணினாய், அதை யாரிடம் பெற்றாய், அதைப் பெற்ற பின்பு என்ன செய்தாய், அதனால் என்ன துன்பம் பட்டாய், அழிவற்ற தேவர்களுக்கும்,முனிவர்களுக்கும், அந்தணர்களுக்கும் கூற்றுவனாயினாய், தவம் செய்து பெற்ற சிறப்புக்களையும் தொலைத்தாய், வேதங்களைக் கற்றுணர்ந்த தக்கன் என்ற பெயரையும் தொலைத்தாய்,

மைந்தன் சொன்னவற்றைக் கேட்ட பிரம்மதேவர், வெட்கமடைந்தாலும் சீறவில்லை. மைந்தனுடைய மனம் ஏற்றுக் கொள்ளுமாறு தேற்றுகிறார். காமத்தின் தீமையைப் பற்றிச் சொல்லி, மைந்தனின் திறமைக ளையும் சொல்லித் தட்டிக் கொடுக்கிறார்.

உன் முக அழகையும் அழித்தாய், உன் பணியை மேற்கொண்ட எவரையும் தொலைத்தாய், சிவனின் பெருமையை நன்கு அறிந்த நீ ஊழ்வினைப் பயனாற் சிவனை இகழ்ந்தாய். நந்தி முதலியோர் சொன்ன அறிவு வாசகங்களையும் அசட்டை செய்தாய். செல்வம் வந்தபோது தெய்வத்தை மறத்தல் சிறப்பாக உன்னிடமுள்ள குற்றமன்று. எல்லாவுயிர்களும் இவ்வாறே செய்கின்றன. திருமாலுக்கும் எனக்குங்கூட இவ்வாறு மயக்க முண்டாயிற்று" என்று சொல்லிய பிரம்மதேவர் மேலும் தொடர்ந்தார்.

"ஆகையால் திருவருளுடைய குற்றமற்ற சிவபெருமானின் திருவடிகளை அன்புடன் அருச்சனை செய்வாயாக. துன்பத்திற்கு ஏதுவான இந்தப் பாவச்செயல் அனைத்தையும் போக்கித் தம்மையறியும் ஞானத்துடன் கூடிய இனிய அருளை அவர் அருள்வார் என்றும் கூறினார்.

ஆதலின் அருளுடைய அமல நாயகன் பாதம
தருச்சனை பரிவிற் செய்குதி
பேதுறும் இப்பவப் பெற்றி நீக்கியே
போதமொ டின்னருள் புரிவன் என்றலும்

அடிமுடி தேடு படலம்-8

பிரம்ம தேவரின் உபதேசத்தைக் கேட்ட தக்கன் சிவனை நோக்கித்தவம் செய்து சிவ கணங்களுடன் சேர்ந்தான்.

இவ்வாறாக அழிவு வந்துற்ற நேரங்களில், தந்தையரின் நெறிப்படுத்துகை மிக முக்கிய மானதொரு பண்பாகக் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்கிறது. அதி லேயும், அந்த நெறிப்படுத்துகை எவ்வளவோ விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே, தாம் விட்ட பிழையைப் பிரம்மதேவர் எடுத்துக் கூறுகிறார் சைவத் தமிழ்க் கலாசாரத்தில் வாழும் தந்தையர்க்கு கந்தபுராணம் காட்டும் நெறி இதுவாகும்.

சிந்தனைகள் தொடரும்....

## நிவேதிதா அம்மையார்

ஒருமுறை கொல்கத்தாவில் பயங்கரமான தொற்றுநோய் பரவியது. அப்போது அங்கு இருந்த சுவாமி விவேகானந்தர் தன்னுடன் இருந்த ஏனைய மதகுருமாரின் உதவியோடு நோயுற்ற மக்களைப் பராமரிக்கும் அணியொன்றை ஆரம்பித்தார். அவருடன் நிவேதிதா அம்மையாரும் தொண்டாற்றினார். சிறு சிறு வேலைகளைக்கூட, தெருவைச் சுத்தம் செய்வது, அவர் தயங்காமற் செய்தார். அவரைப் பார்த்து மற்றவர்களும் அவருடன் இணைந்து சேவை செய்தார்கள். இதனாற் பல மக்கள் பயனடைந்தார்கள்.

அயர்லாந்தைச் சேர்ந்த மார்கரெட் எலிசபெத் நோபிள் என்ற பெண்மணிதான் நிவேதிதா. விவேகானந்தரின் போதனைகளால் மன நிறைவு பெற்ற அவர் சுவாமியின் சேவைகளிலே தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். ஜனவரி 1898இல் அவர் கொல்கத்தா வந்தார். இந்திய மக்களுக்குச் சேவை செய்வதே தம் பணி என்று உறுதி எடுத்துக்கொண்டார். சுவாமி விவேகானந்தரே இவருக்கு நிவேதிதா என்று பெயரிட்டார். நிவேதிதா 1867 அக்டோபர் 28இல் பிறந்தார். சேவை நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து 1911 அக்டோபர் 13இல் இறைபதம் அடைந்தார். தனக்கென வாழாது இந்தியாவில் அன்பு செலுத்தி அதன் மக்களுக்குத் தன் சேவையை ஈந்தவர் என இரவீந்திரநாத தாகூரால் பாராட்டப்பெற்றவர் நிவேதிதா.

# குரு

**டாக்டர் சித.வீரப்பன்**

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று படித்திருக்கின்றோம். நமக்கு தாயாரையும் தந்தையையும் தெரியும். மூன்றாவதாகக் குருவைச் சொல்லுகிறார்கள்.

குரு என்பதற்குப் பலவிதமான அர்த்தங்கள் உள்ளன. குரு என்ற சொல்லுக்கு ஆசிரியர், தேசிகர், ஆசாரியர், அத்தியக்ஷகர், புரோகிதர் என்று நாம் நமது அறிவுக்குத் தெரிந்தமாதிரிப் பொருள் சொல்லிக்கொள்கிறோம்.

குரு என்பவர் யார்? ஏன் அவரைத் தெய்வத்தின் முன் வைத்தனர்?

குரு என்பவர் இருட்டினைப் போக்கி நம்மை நற்கதி அடைய வழிகாட்டுபவர் ஆவர். தெய்வத்தை (இறைவனை) எல்லோரும் வணங்கி நற்கதி பெறலாம். நாம் மீண்டும் மீண்டும் பிறப்பு, இறப்பு என்ற வட்டத்துக்குள் வராமல், நமது அறியாமையைக் களைந்து, ஞானத்துக்கு வழிகாட்டி நமது இலட்சியங்களை அடையச்செய்பவர் குரு.

குரு என்ற சொல்லில் 'க', 'ர', 'உ' என்ற மூன்று எழுத்துக்கள் சேர்ந்துள்ளன. இந்த மூன்று எழுத்துக்களுக்கும் (க+உ=கு: ர+உ=ரு) ஒவ்வொரு பொருளுண்டு.

'க' என்றால் சித்தி தருவது. அதாவது இலட்சியத்தை முயன்று அறிந்து தக்கவைத்துக்கொள்வது. உதாரணம்: மருத்துவனாக வேண்டும் என்னும் இலட்சியத்தை அடைந்து அதனை தன்னிடம் தங்கவைத்துக்கொள்வது. படித்து முடித்தது மட்டும் போதாது. அதனை அநுபவ பூர்வமாக உணர்ந்து வளர்ச்சிகளை அறிந்து தினமும் அதனைப் பயன்படுத்தினால் மட்டுமே இலட்சியம் நிறைவு பெறும்.

மருத்துவத்தைத் தினமும் செய்யாவிட்டாலும், வளர்ச்சிகளை அறியாமல் விட்டாலும், இலட்சியம் நிறைவு பெற்றதாகவோ தன்னிடம் தங்கியுள்ளதாகவோ கூறமுடியாது.

'ர' என்றாற் பாவத்தைப் போக்குவது. நமக்குப் பலவிதமான ஆசைகள். இறைவனை ஒரு முகமாகத் துதிக்க முடிவதில்லை. தினமும் ஏதாவது பாவங்களைச் செய்கிறோம். அவைகளில் நாம் அகப்படாமல் நம்மை வெளிக்கொணருபவர்.

'உ' என்பது திருமால் அம்சம் என்பர். அதாவது நம்மைக்காப்பவர் என்று பொருள். இதனையே திருமூலர் மிகவும் அழகாக,

குருட்டினை நீக்கும் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடும் குருடும் குழிவீழு மாறே

என்று கூறினார்.

இதனை 'அபக்குவன்' என்ற தலைப்பின் கீழ்க் கூறுகின்றார். ஏனென்றால், பக்குவத்தை அடைய வழிகாட்டுபவனே குரு. அப்படிச் செய்யாத பொய்க்குருவைப் பற்றி கூற வரும்போது இதனைத் திருமூலர் கூறுகிறார்.

இருபத்தொராம் நூற்றாண்டில் குரு என்ற வழிகாட்டி தேவையா? என்ற எண்ணம் ஏற்படும். உலகம் கணினியினால் மிகவும் சுருங்கி விட்டது. எந்தத் தலைப்புப்பற்றி அறிய வேண்டுமென்றாலும் அதனுடைய நுட்பங்களைக் கணினி மூலம் தெரிந்து கொள்ளலாமே என்ற எண்ணம் ஏற்படும். கணினி எல்லாச் செய்திகளையும் கூறுமே தவிர எது நல்லது எது கெட்டது என்று கூறாது இது எப்படியெனில் 'ரொம் ரொம்' வழியைக் கூறும். பெருவழிச் சாலை வழியாகவோ, இயற்கை சூழ்ந்த வழியாகவோ, 'ஏ' அல்லது 'பீ' சாலைகள் மூலமாகவோ செல்ல வழிவகுத்துக் கொடுக்கும். ஆனால் அது எத்தனை முறை வழிமுடி வான (Dead End) இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளது, மிகவும் குறுகிய வழியைக் காண்பித்துள்ளது என்பதைச் செய்தித்தாள்கள்

மூலம் அறிகிறோம். அநுபவமுள்ள ஒருவர் இப்படியாவதைத் தடுத்து விடுவார். ஆகவே விஞ்ஞானம் முன்னேறியிருந்தாலும் பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்குக் குரு தேவைப் படுகிறார்.

நமது புராணங்கள் இதிகாசங்களில் குரு- மாணவர்கள் கூறப்படுகிறார்கள்.
தக்ஷிணாமூர்த்தி குரு- சனகாதி முனிவர்கள் மாணவர்கள்.
வசிட்டர் குரு- இராமன், இலட்சமணன், பரதன், சத்துருக்கன் மாணவர்கள்
முருகன் குரு- சிவன் மாணவர்

தற்காலத்தை எடுத்துக்கொண்டால் இராம கிருஷ்ணபரமஹம்சர் குரு -விவேகானந்தர் மாணவர். இப்படிக் கூறிக்கொண்டே போகலாம்.

நாம் திருமூலர் சொன்னபடி மெய்யான குருவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அருணகிரிநாதர்கூறியபடி

'உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'

என்று முருகனையே குருவாக ஏற்றுக் கொள்ளலாம்.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

என்ற வள்ளுவன் கூற்றுப்படி, இறைவனை அடையக் குரு இன்றியமையாதவர். அவர்தாம் நம்மை இறைவனைத் தரிசிப்பதற்கும், அவனுடைய திருநாமங்களைச் சொல்லுவ தற்கும் உபதேச மொழி கேட்பதற்கும், அவனைத் தியானிப்பதற்கும் உதவி, மெய்ஞ் ஞானம் நமக்கு கிடைக்க வழி செய்பவர்.

உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவை
கள்ளமனம் தன்னைத் தள்ளிக் கண்டுகொண்டு அன்பாய்க்
களித்துக் களித்து நின்று ஆடுபாம்பே!

என்று பாம்பாட்டிச் சித்தர் சொன்னபடி நல்ல குருவை தெரிந்தெடுத்து அவர் காட்டும் வழி மூலமாக நற்கதி பெறுவோமாக.

## பண்ணிசைப் பாமாலை - Temple Melodies

பண்ணிசைப் பாமாலை என்ற தலைப்பிலே, 'இன்குரல் இசை கெழ' திருமதி மாதினி சிறிஸ்கந்தராசா அவர்கள் ஒரு இசைத்தட்டை வெளியிட்டுள்ளார்கள். இதிலே தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம், அபிராமி அந்தாதி, அபிராமிப் பதிகம், திருப்புகழ் எனப் பல அருட்பாடல்கள் உள்ளன. இதுபற்றிய விமரிசனத்திலே சென்னை 'இந்து' பத்திரிகையிலே திரு சிவகுமார் இப்படி எழுதியுள்ளார்,

"The feeling one gets is that if played as a routineat home, daily, children would effortlessly master the hymns"

இந்த இசைத்தட்டு சைவர்களாகிய அனைவரது வீட்டிலும் இருக்கவேண்டிய ஒன்று. பிள்ளைகள் காலை, மாலையிற் கேட்டுப் பயன் அடையவும் பெற்றோர் மன அமைதி பெறவும் இந்த இசை உதவும்.
பண்ணிசைப் பாமாலை இசைத்தட்டு பற்றிய விமரிசனம் அடுத்த கலசம் இதழில்........

இசைத்தட்டுப் பிரதிகள் பெற:
திரு செ சிறிஸ்கந்தராசா 0208 590 9905

# புராணங்களும் வேதமும்

## காஞ்சிப்பெரியவர்

உங்களில் ரொம்பப் பேருக்கு இது விசித்திரமாக இருக்கும். அதாவது, வேதம் ஸமஸ்கிருத பாஷையில் இருக்கிறது என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அதுவே தப்பு, வேத பாஷைக்கு 'ஸமஸ்கிருதம்'என்று பேர் இல்லை. அதற்குப் பேர் 'சந்தஸ்' என்பது தான். சந்தஸ் என்றால் (Meter) மட்டுமில்லை. சந்தங்களில் அமைந்த வேதங்களுக்கும் வேதபாஷைக்கும் கூட சந்தஸ் என்றே பேர். வேதம் தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் (லௌகிகமான பேச்சு, எழுத்து, காவியங்கள் ஆகியன மட்டுமன்றி, தர்ம சாஸ்திரம், புராணஇதிஹாஸம் உள்பட எல்லா விஷயங்களிலும்) பிரயோகமாகிற பாஷைக்குத்தான் சமஸ்கிருதம் என்று பேர். 'ஸமஸ்கிருதம்' என்றால் நன்றாகச் செய்யப்பட்டது. அப்போது யாரோ உட்கார்ந்து கொண்டு பிரயத்தனப்பட்டு இந்தப் பாஷையைச் செய்திருக்கிறார்கள் என்று ஆகிறது. வேதபாஷை இப்படி இல்லையே! அது தானாக Flash ஆனது (பளிச்சிட்டது). ஆதலால் அதில் Grammar (இலக்கணம்) முக்கியமில்லை லோகோபகாரமாக இப்படி வந்த சப்தங்களை வைத்தே அதற்கு நன்றாக Grammar முதலியவையும் இருப்பதாக ஸம்காரம் செய்து, தேவஜாதியினர் ஸமஸ்கிருத பாஷையைப் பண்ணி அதில் பேசலானார்கள். அதனால் தான் Vedic grammar (வேதஇலக்கணம்) Vedic Prosody (வேதத்தின் யாப்பு) என்றெல்லாம் தனியாக இருக்கின்றன. வேதத்திலிருந்து ஸமஸ்கிருதம் பண்ணப்பட்டது என்பதாலேயே வேதம் ஸமஸ்கிருதம் இல்லை. பிற்பாடு ஸமஸ்கிருதம் தானாக வளர்ந்தும், ஸர்வதேசப் பரிவர்த்தனைகளாலும் அநேக புது வார்த்தைகள் அதில் சேர்ந்த மாதிரி வேதத்தின் பாஷையில் ஏற்படவில்லை.

வேதம் ஸமஸ்கிருதம் இல்லை என்பதே இப்போது நம் தாய் பாஷைகளுக்கு இல்லாத ஸ்தானம் ஸமஸ்கிருதத்திதுக்கு ஏன் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தால், வேத வித்யையை ஆதரிக்காமல் கோபப்படுகிறவர்களுக்கு கொஞ்ச ஆறுலாக இருக்கும். இரண்டு கால் பிராணி, நாலுகால் பிராணி ஆகிய அனைத்துக்கும் க்ஷேமத்தை உண்டுபண்ணும் சலனங்களை உண்டாக்கக் கூடிய சப்தங்களையே உடையதான வேத பாஷையும் மற்ற அநேக மந்திர சாஸ்திர மந்திரங்களின் பாஷையும், நாம் நடைமுறையில் சொல்கிற அர்த்தத்தில் பாஷையே இல்லை. அவை ஒரு ஜாதிக்கோ, இனத்துக்கோ உரியன இல்லை.
தொல்காப்பியர், வேத சப்தங்க் பரா என்கிற மூலத்தில் தோன்றியதால் முக்கியத்வம் பெற்றவையாகும் என்று சொல்லி, 'இப்படிப்பட்ட அக்ஷரங்களைப் பற்றி இந்தத் தொல்காப்பியத்தில் நான் சொல்லப்போவதில்லை. இங்கே சாதாரண மனிதர்களின் காதுக்கு எட்டும் வைகரி சப்தங்களை மட்டும்தான் விவரிக்கப் போகிறேன்'

'நம் பாஷையில் ஒன்று இருந்தால்தான் உசந்தது. வேறெந்தப் பாஷையில் இருந்தாலும் மட்டம், அது வேண்டாம்' என்று நினைப்பது கொஞ்சம் கூடப் பகுத்தறிவாகத் தோன்றவில்லை. உலகத்திலிருக்கிற அத்தனை புத்திசாலித்தனமும், நல்லதும் நம் பாஷையில் தான் இருக்க வேண்டும் என்று நாம் நினைத்தால், அவரவர்களும் இப்படித்தானே நினைப்பார்கள்? அதனால் இந்தப் பாஷைதான், அந்தப்பாஷைதான் என்றால்-அதில் துளிக்கூடப் பகுத்தறிவும் இல்லை, யதார்த்த ஞானமும்இல்லை. ஒரு பக்கத்தில் நம்பிக்கையின் மீதே அநேக விஷயங்களை ஏற்க வேண்டிய ஆஸ்திகயத்தைப் பரிஹாசம் செய்து, பகுத்தறிவு பகுத்தறிவு என்கிறார்கள்.

இன்னொரு பக்கத்தில், இப்படிப் பிரத்தியக்ஷத்திலேயே பகுத்தறிவு இல்லாமல் இருக்கிறது. ஒரு பக்கத்தில் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்பதுதான் தமிழ்நாட்டின் தேசாசாரம் என்று சொல்கிறோம். இன்னொரு பக்கம் ஆதிகாலத்திலிருந்து இங்கு உறைந்து போய்விட்ட ஸநாதனமான ஸமாச்சாரங்ளைக் கூட எப்படியாவது இல்லாமல் பண்ணிவிட்டால் தேவலை என்று நினைக்கிறோம். மந்திரங்களை நாம் விடுவதால் மந்திரங்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லை. நமக்குத்தான் நஷ்டம். மைசூரிலிருந்து காவேரி வருகிறது. வெளிதேசத்திலிருந்து உயிரைக் காப்பாற்றக்கூடிய ஒரு மருந்து வருகிறது என்றால், 'அதெல்லாம் வேண்டாம், உள்ளூர் ஜலம் கிடைத்தால்தான் குடிப்போம்! உள்ளூர் மருந்தானால் தான் சாப்பிடுவோம்' என்று உயிரை விடுவார்களா? நமக்குப் பெரிய ரகைஷயாக இருக்கிற மந்திரங்களில் பாஷையைக்கொண்டு வந்து, அந்நியம் என்று ஒதுக்குவது இப்படித்தான். வாஸ்தவத்தில் அது அந்நியமும் இல்லை. நம்மோடு அந்நியோந்நியமாக ஆதிகாலத்திலிருந்து கரைந்ததுதான்.

ஆதி நாளிலிருந்து சென்ற நூற்றாண்டுவரை நம் தமிழ் தேசத்தில் இப்படிப்பட்ட பேத உணர்ச்சி இல்லயே இல்லை. ரொம்பவும் தொன்மை வாய்ந்த புறநானூற்றிலேயே, நீண்டசடாமுடியைக் கொண்ட இறைவன் எப்போது பார்த்தாலும் ஆறங்கத்துடன் கூடிய வேதத்தை ஓதிக்கொண்டிருக்கிறான் என்று சொல்லப்பட்டுள்ளது.

> "நன்றாய்ந்த நீளநிமிர்சடை முது முதல்வன்
> வாய் போகாது ஒன்று புரிந்த ஈரிரண்டின்
> ஆறுணர்ந்த ஒரு முதுநூல்"
>
> -(புறநானூறு)

நன்றி - கலைமகள்

## அளவுக்கு மிஞ்சினால்............

கல்வி கேள்விகளிற் சிறந்த ஒருவர் பயணம் செய்தார். அவருக்கு மிகவும் பசி எடுத்தது. போகும் வழியிலே ஓரிடத்திலே சுண்டல் கொடுத்துக்கொண்டு இருந்தார்கள். இவர் கையை நீட்டினார். தாராளமாகச் சுண்டல் கிடைத்தது. அதை உண்ணும்போது அவருக்கு விக்கல் வந்தது. சுண்டல் கொடுத்தவர், 'உங்களுக்கு விக்குகிறதே! தண்ணீர் குடியுங்கள்' என்று கொடுத்தார். ஆனால் அந்தக் கற்றவர் கிட்டவுள்ள நீர்நிலை எங்கே என்று கேட்டு கொஞ்சத் தூரம் போய் அங்கு தாமே நீர் எடுத்துக் குடித்தார்.
சுண்டல் கொடுத்தவரோ, "என்ன இது? நான் கொடுத்த சுண்டலை வாங்கினீர்கள். ஆனால் தண்ணீரை ஏற்க மறுப்பதேன்?" என்றார்.

அதற்கு அந்த வழிப்போக்கர், "ஐயா! நீங்கள் கொடுத்த சுண்டலை நான் வாங்கியிராவிட்டால் பசிக்களையில் இறந்திருப்பேன். அதனால் ஏற்றுக்கொண்டேன். அது ஆபத்துக்கால தருமம். நீங்கள் தந்த சுண்டலைத் தின்றதும் என் உடம்பிலே தெம்பு வந்துவிட்டது. அதற்குமேல் வேண்டியதை நாமே உழைத்துத் தேடவேண்டும்" என்றார்.

அதுபோல நமக்கு உரிமையில்லாத பொருளை நாம் உபயோகிக்கக்கூடாது. உரிமையுள்ள பொருள்களையும் அளவுக்கு அதிகமாக உபயோகிக்கக்கூடாது. இலவசமாகக் கிடைக்கிறதே என்று நமது இஷ்டத்துக்கு இருக்கக்கூடாது. இவையெல்லாம் நம் முன்னோர் சாத்திரங்களிற் சொல்லி வைத்தவை.

- திருமுருக கிருபானந்தவாரியார் சொற்பொழிவிலிருந்து -

# நால்வரின் பிறப்பிடங்களும் வீடுபேறு பெற்ற தலங்களும்

## திருஞானசம்பந்தர்

**சீர்காழியிலே** அவதாரம் செய்தார். சென்னை - மயிலாடுதுறை இருப்புப் பாதையிலுள்ள பெரிய ஊர். திருக்குளத்தின் கரையிலே ஞானப்பால் அருந்தி மூன்றாவது அகவையிலே இறைவன்மேற் பலவிதமான பண்களை இயற்றினார். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் எனப் புகழப்பட்டார். மதுரையிலே அனல், புனல் வாதம் செய்து சமணர்களுடைய ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டுவந்தார். பதினாறாவது ஆண்டில், தமது திருமண நாளன்று **நல்லூர்ப் பெருமணத்தில்** (தற்போது ஆச்சாள்புரம் என்று அழைக்கப்படுகிறது) தன்னுடைய சுற்றத்தார் அனைவருடனும் சோதியிற் கலந்தார்.

## திருநாவுக்கரசர்

**திருவாமூரிலே** அவதரித்தார். மருள்நீக்கியார் என்ற திருப்பெயர் தரப்பட்டார். திருவாமூர், திருநாவலூருக்கும் திருவதிகைக்கும் (பண்ருட்டி) இடையிலே உள்ளது. ஆமூருக்குச் செல்லும் வழியே இயற்கை வளத்துடன் அழகாயிருக்கிறது. ஊரும் அழகான சிற்றூர். சூலை நோயைத் தீர்த்து அவரை இறைவன் ஆட்கொண்ட தலம் அதிகைக்கெடில வீரட்டானமாகும். இது பண்ருட்டி அருகிலுள்ள தலம். தம்முடைய எண்பதாம் ஆண்டிலே **திருப்புகலூரிலே,** புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே என்றவாறு இறைவனை அடைந்தார். ஏலாக்குறிச்சி ஆதீனம் இங்கு உள்ளது. சிறிய ஊர். பெரிய உணவகமோ தங்குவதற்கு இடமோ இல்லை. மயிலாடுதுறை அல்லது திருவாரூரிலே தங்கியே இங்கு செல்லவேண்டும்.

## சுந்தரமூர்த்தி நாயனார்

**திருநாவலூரிலே** அவதரித்தார். நரசிங்கமுனையரால் அரசிளங்குமரன் போல வளர்க்கப்பட்டார். முனையர் இருந்த சேந்தமங்கலம் திருநாவலூருக்கு அருகிலேயே உள்ளது. திருநாவலூர், சென்னை ‘திருச்சி பெருவழிச்சாலையின் (NH45) அருகிலேயே (2கிமீ) உள்ளது. திருவாரூரும் திருவொற்றியூரும் சுந்தரரோடு இணைத்துப் பேசப்படும் தலங்களாகும். தன்னுடைய 18ஆம் ஆண்டில் மலை நாட்டிலுள்ள திருவஞ்சைக்களத்திலிருந்து வெள்ளை யானையின்மேல் இவர்ந்து **நொடித்தான்மலைக்குச் (திருக்கயிலாயம்)** சென்றதாகக் கூறப்படுகிறது. கேரளாவில் உள்ள திருவஞ்சைக்களத்துக்கு அருகிலுள்ள கொடுங்களூர் பகவதி அம்மன் கோயில் சிறப்பு மிக்கது.

## மாணிக்கவாசகர்

மதுரைக்கு அருகிலுள்ள **திருவாதவூரிலே** அவதரித்தார். இதன் அருகில் திருமோகூர் என்ற சிறப்புமிக்க வைணவத்தலம் உள்ளது. திருப்பெருந்துறையில் இறைவன் மணிவாசகரை ஆட்கொண்டார். உத்தரகோசமங்கை என்ற ஊரிலே மணிவாசகர் ஈடுபாடு கொண்டிருந்தார். தில்லை அழகிய சிற்றம்பலமுடையான் இவருடைய திருவாசகத்தை தன் கையாலே எழுதினான் என்பர். **தில்லை (சிதம்பரம்)** அம்பலவாணன் சந்நிதியிலே திருவாசகத்துக்குப் பொருள் இவனே என்று பிரானைச் சுட்டிக்காட்டியபடி அவனுடன் இரண்டறக் கலந்தார்.



சீர்காழி – திருக்குளம்



மதுரை – பொற்றாமரைக்குளம்



நல்லூர்ப் பெருமணம்



திருவாரூர் – அப்பர் கோயில்



திருவாரூர் சிவன் கோயில்
திலகவதியார்–அப்பர் சந்நிதிகள்



திருவதிகை வீரட்டானம்



திருப்புகலூர்



திருநாவலூர்–சுந்தரர் சந்நிதி



சேந்தமங்கலம் கோயில் (இடிபாடு)



திருவஞ்சைக்களம்



திருவாதவூர்–மாணிக்கவாசகர் கோயில்



திருவாதவூர்–சிவன் கோயில்



திருப்பெருந்துறை–குருந்தமரம்



உத்தரகோசமங்கை



தில்லை ( சிதம்பரம் )

# காயத்ரி மந்திரத்தை இராகத்துடன் பாடலாமா?

சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்

**காயத்ரி மந்திரத்தை ராகத்துடன் பல பெண்கள் பாடும் காட்சியை வடநாட்டு பக்தி தொலைக்காட்சி ஒன்று ஒளிபரப்புவது நெஞ்சைக் கவர்கிறது. ஆனால் இப்படிப் பாடப்படும் காயத்ரியை கேட்கக்கூடாது என்று ஒரு சாரார் சொல்லுகிறார்களே........ ஏன்?**

தேசிய கீதம் ஒலிக்கிறது. கேட்பவர்கள் எழுந்துநின்று மரியாதை அளிக்க வேண்டும். மூவர்ணக் கொடி, அது நாட்டின் சின்னம். அது மதிப்புக்கு உரியது. அதை வணங்கவேண்டும் என்று தோன்றும். தேசியப் பாடலையும் மூவர்ணக் கொடியையும் தவறாகப் பயன்படுத்தமாட்டோம். ஏன் என்றால் அவை தனித் தன்மை வாய்ந்தவை. வெறும் துணியென்று கொடியை அவமதித்தால், தண்டனை உண்டு. துணியானாலும் பாட்டானாலும் அதையும் தாண்டி ஒரு பெருமை அவைக்குண்டு.

மறையின் சாரம் காயத்ரி. அதற்கு மரியாதை அளிக்கவேண்டும். அது எழுத்துக்களின் குவியல் அல்ல பாட்டாகப் பாடவேண்டிய சாகித்தியம் அல்ல வியாபாரம் செய்ய வேண்டிய கடைச்சரக்கல்ல பொது விநியோகம் செய்யும் பொருளல்ல காதாற் கேட்டு ரசிக்கவேண்டிய கானம் அல்ல பொழுது போக்குக்கு பயன்படும் பொருளும் அல்ல!

மற்றச் சிந்தனைகள் அனைத்திலிருந்தும் விடுபட்ட மனம் காயத்ரியில் ஊன்றித் திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். உதடு அசையாமல் மனம் மட்டும் அதை அசைபோடவேண்டும். பிறர் காதுக்கு எட்டாத வகையில் அதன் உச்சரிப்பு இருக்கவேண்டும். இது ஒரு தவம். நமது சிந்தனையைச் சரியான வழியிலே திருப்பிவிட அது உதவும்.

காயத்ரியின் உருவம் ஒலி. அதன் கருத்து பரம்பொருள். அதை வெளிப்படுத்தும் கருவி எழுத்துக்கள். உடலுக்குள் இருக்கும் காற்று, உடல் உறுப்புக்களிலே பட்டு அந்த எழுத்துக்கள் உருவெடுக்கவேண்டும். ஒலியின் அளவு, அதை வெளியிடும் ஓசையின் தரம் ஆகியவை சரியாக இருக்கவேண்டும். எழுத்துக்களில் தென்படும் ஏற்ற இறக்கம், சமம் ஆகியவற்றுக்கும் மதிப்புக் கொடுக்க வேண்டும். வாய் வழி எழுத்துக்களை வெளிப்படுத்தி, அதன் வாயிலாக ஒலியில் தென்படவேண்டும் காயத்ரி. உயிரோட்டமுள்ள காயத்ரி அப்போது பிரசன்னமாவாள்.

புத்தகம், ஒலிநாடா, ஒலிபெருக்கி மூலம் காயத்ரியை வெளியிடக்கூடாது. காயத்ரிக்கு லிபி (எழுத்து வடிவம்) கிடையாது. நாம்தான் ஒலிக்கு உகந்த லிபியைத் தயார்

***புத்தகம், ஒலிநாடா, ஒலிபெருக்கி மூலம் காயத்ரியை வெளியிடக்கூடாது. காயத்ரிக்கு லிபி (எழுத்து வடிவம்) கிடையாது. நாம்தான் ஒலிக்கு உகந்த லிபியைத் தயார் செய்திருக்கிறோம். அதுவும் தவறு. வாய் மொழியாகக் காதாற் கேட்டு, காயத்ரியைப் பெற்றுக் கொள்ளவேண்டும். கற்றுக்கொள்வதற்கும் கற்றுக்கொடுப்பதற்கும் தகுதி வேண்டும். கற்றுக்கொள்பவன் அதைக் கடைப்பிடிக்கும் திறன் பெற்றிருக்கவேண்டும் கற்றுக் கொடுப்பவன், அதை வழிபட்டுப் பயன் பெற்றிருக்கவேண்டும். குரு வாயிலாக சிஷ்யனுக்குக் கிடைத்த காயத்ரி பயனுள்ளதாக இருக்கும்.***

செய்திருக்கிறோம். அதுவும் தவறு. வாய் மொழியாகக் காதாற் கேட்டு, காயத்ரியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக் கொள்வதற்கும் கற்றுக்கொடுப்பதற்கும் தகுதி வேண்டும். கற்றுக்கொள்பவன் அதைக் கடைப்பிடிக்கும் திறன் பெற்றிருக்கவேண்டும் கற்றுக் கொடுப்பவன், அதை வழிபட்டுப் பயன் பெற்றிருக்கவேண்டும். குரு வாயிலாக சிஷ்யனுக்குக் கிடைத்த காயத்ரி பயனுள் ளதாக இருக்கும். இந்தச் சட்டங்களை மீறியும் காயத்ரியைப் பெறமுடியும். ஆனால் அதில் உயிரோட்டம் இருக்காது...... பயனளிக்காது.

தேர்தலில் வெற்றிபெற்று, சட்டசபைக்கு வருகிறார் ஒருவர். பதவிப்பிரமாணம் ஆன பிறகு அவருக்கு அங்கீகாரம் கிடைக்கிறது. பதவிப்பிரமாணம் செய்து வைப்பவருக்கும், பதவிப்பிரமாணம் எடுத்துக்கொள்பவருக்கும் தகுதி இருக்கவேண்டும். தேர்தலிற் பெற்ற வெற்றி அவருக்குத் தகுதி. ஏற்கெனவே பதவியில் இருக்கும் மற்றவர் பதவிப் பிரமாணம் செய்விக்கும் தகுதி உள்ளவர். பதவிப்பிரமாண உறுதிமொழியை ஒருவர் வாயாற் சொல்லி, மற்றவர் காதாற் கேட்டுச் சொல்லவேண்டும். உறுதிமொழியை ஒருவர் வாயாற் சொல்கிறார். மற்றவர் அதைக் கேட்டு, தவறில்லாமல் கிளிப்பிள்ளைபோல், சொல் கிறார். அந்த உறுதிமொழியில் உயிரோட்டம் உண்டு. அதையே நாம் அச்சிட்டு விநியோகம் செய்யலாம். ஆனால் அதைப் படிப்பவர் களுக்குப் பயன் கிடையாது.

ஆயிரம் ரூபாய் நோட்டு. அது காகிதத்தில் தென்படும். அதில் சில வண்ணங்கள், காட்சிகள் இருக்கும். வரிசை எண், அதன் அளவு, அதன் தோற்றம் ஆகியவற்றிலும் ஒரு பரிமாணம் இருக்கும். தகுதி படைத்த ஒருவரின் கையொப்பம் இருக்கும். அப்போது காகிதம் ஆயிரம் ரூபாவாக மலரும். இதில் ஏதாவது குறை இருந்தால் அது செல்லாக் காசாகிவிடும்.

கடுதாசியில் எழுதப்பட்ட காயத்ரியும் அப்ப டியே. அது உயிரோட்டம் இல்லாதது. நமக்குப் பயன்படாது. ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது. தனி மனிதனின் சிந்தனையில் இருக்கும் மாசை அகற்றிச் சுத்தப்படுத்தும் மருந்து காயத்ரி. உள்ளத் தூய்மையை நிலைபெறச் செய்யும் வல்லமை அதற்கு உண்டு. சின்னத் திரையிலும் பெரிய திரையிலும் அதைப் பயன்படுத்துவது வீண். நமது பண்பாட்டை ஏளனம் செய்வதை நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளுகிறோம். சிந்தனை மாறிவிட்டது. அறத்திற் பிடிப்புத் தளர்ந்துவிட்டது. சுதந்திரத்தைத் தப்பாகப் பயன்படுத்துகிறோம். வடக்கத்திய பக்தித் தொலைக்காட்சிகள் காயத்ரியைப் பாடிப் புகழ்கின்றன. அதைத் தாங்கள் ரசித்து மகிழ்வதாகவும் எழுதியிருக்கிறீர்கள். உயி ரோட்டமில்லாத காயத்ரியையே கேட்ட மாத்தி ரத்தில் மகிழ்ச்சி கொடுக்கிறது என்றால், உயிருள்ள காயத்ரியை தாங்கள் வழிபட்டால் அது பேரின்பத்தை அளிக்காதா? யோசித்துப் பாருங்கள்!

***உலகத்தைத் திருத்த இயலாது. நாம் திருந்தினால் உலகம் நம்மைப் பார்த்துத் திருந்திவிடும். அதர்மம் தலை தூக்கும் காலம், அதன் வேலையை அது செவ்வனே செய்கிறது. பொறுமையைக் கடைப்பிடிப்போம். நன்மை தேடிவரும்***

உலகத்தைத் திருத்த இயலாது. நாம் திருந்தினால் உலகம் நம்மைப் பார்த்துத் திருந்திவிடும். அதர்மம் தலை தூக்கும் காலம், அதன் வேலையை அது செவ்வனே செய்கிறது. பொறுமையைக் கடைப்பிடிப்போம். நன்மை தேடிவரும்.

நன்றி - சக்தி





சைவ
முன்னேற்றச் சங்கத்
தொண்டர் சிறுவர்
நடத்திய நவராத்திரி
விழா.





சைவ
முன்னேற்றச் சங்க
மண்டபத்திலே நடந்த
கலை நிகழ்ச்சியின்
சில பதிவுகள்
28.08.08





# மனிதவாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்

துன்னையூர் கலாநிதி ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்



## இடபலக்னம்

இடபம் அல்லது ரிஷபம் என்று கூறப்படுகின்ற இந்த லக்னமானது, லக்ன வரிசையில் இரண்டாவது லக்னமாக அமைகின்றது. இந்த லக்னத்துக்குரிய அதிபதிக் கிரஹம் சுக்கிரன். பொதுவாகவே கிரஹங்களில் சுக, போகக்காரகனாக அமைபவன் சுக்கிரன். எல்லா விதமான சுகங்களையும் கொடுக்கக் கூடிய ஆற்றல் உடையவன். அந்த வகையில் 'இடபலக்னம்' உடையவர்களுக்கு, வாக்குஸ்தான அதிதியாகப் புதன் அமைவதும், சுகஸ்தான அதிபதியாகச் சூரியன் அமைவதும் சிறப்பான கல்வி நிலைகளும், உயர்கல்வி யோகங்களும் அமையக்கூடிய ஆற்றல் இருக்கும். கணி தத்துறையில் நல்ல மேன்மைகள் அமையும். தான் நினைக்கின்ற விடயங்களைச் சாதிக்கின்ற திறமை மிகவும் அதிகமாக இருக்கும். இந்த லக்னத்தில் உள்ளவர்கள் சாதுர்யமான செயற்பாட்டில் வல்லமையுடைய ஆற்றல் கொண்டவர்கள். இந்த லக்னமுடையவர்க்குக் களத்திரக் காரகனாக செவ்வாய் அமைவது குடும்ப வாழ்க்கை, சிறப்பானதாக அமையும் நிலையுண்டு. குடும்பத்திற்கு உரிய கிரஹமாக அங்காரகன் எனப்படுகின்ற செவ்வாய் அமைவது நல்ல சொத்துக்கள் சேர்க்கை உடைய மனையாள் அமைகின்ற பலன் இருக்கும். ஜாதகநிலையில் இடபலக்னம் உடைய அன்பர் களுக்கு புதன், சனி கிரஹங்கள் நல்ல யோகத்தையும், சிறப்பையும் கொடுக்கும். இக்கிரஹங்களின் மஹாதிசைக் காலங்களில் அதிகமான சிறப்புக்கள் அமையும். தனது விடயங்களிலும், செயற்பாடுகளிலும், நல்ல அக்கறையோடு செயலாற்றுவார்கள். இரகசியங்களைப் பேணிக்காப்பதில் மிகவும் வல்லவர்கள். மேலும் இந்த லக்னமுடைய அன்பர்களுக்குக் குருபகவான் லாபஸ்தான அதிபதியாக அமைந்திருப்பது, ஜாதகமஹா திசைக் காலங்களிலும், வருமானம், பணவரவு, விடயங்களிலும் மிகவும் அநுகூலமான பலா பலன்கள் அமையும். பொதுவாகவே சுக,போகாதிபதியான சுக்கிரன் ஜன்மலக்ன அதிபதியாக அமைந்திருப்பதால் இந்த லக்னத்திலே ஜனித்த ஜாதகர்களுக்கு மிகவும் யோகமான வாழ்க்கை அமையும். குடும்ப வாழ்வில் மிகவும் சிறப்புகள் ஏற்படும். போககாரகன் எனப்படும் சுக்கிரன் லக்ன அதிபதியாக அமைவது சுக, போகங்கள் ஜாதகரைத் தேடிவரும் நிலையுண்டு. எதிர் பார்க்கின்ற விடயம் வாழ்வில் அதிர்ஷ்ட கரமாக அமைந்துவிடும் நிலையுண்டு. இருப்பினும் இவர்களிடம் அமைந்திருக்கும் பிடிவாதம், முன்கோபம், மற்றவர்களிடம் சற்று பொறாமை, போன்ற குண இயல்புகளாற் சிறுசிறு பிரசினைகளைச் சந்திக்க வேண்டிய நிலையும் உண்டு. இவர்களின் அதிர்ஷ்ட கரமான நிறம் வெள்ளை. இவர்களுக்கு 'வைரக்கல்' மிகவும் அதிர்ஷ்டம் தரக்கூடியதாக

அமையும். புதிய ஆபரணங்கள், புதிய பொருள்களிலே அதிகமான நாட்டம் இருக்கும். ஆடை, ஆபரணங்கள் அணிவதில் அதிக விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள். இந்தலக்ன அன்பர்களுக்கு ஜென்ம லக்னத்திலே சந்திரன் அமைவதும் ராஜ யோகம் கொடுக்கின்ற நிலையாக அமையும். இப்படி அமையும் நிலையுடைய ஜாதகர் நாடாளும் சக்கரவர்த்தியாக இருப்பார். பொதுவாக சுபகிரஹங்களின் பார்வை பெற்று அமைந்திருந்தால் எழுபது வருஷம் வாழும் நிலை உண்டு.

அடுத்த இதழில் மிதுனலக்னம்...

# உங்கள் கருத்துக்கள்....

விம்பிள்டன் கோயில் தேர் ஊர்வலத்தின்போது 'கலசம்' இதழ் கிடைக்கப்பெற்றேன். இவ்விதழ் துளிகூட அரசியல் கலவாமல், முற்றிலும் தமிழ், கலை, கலாசாரத்தையும் இந்துப் பண்பாட்டையும் பிரதிபலிப்பதைக்கண்டு ஆச்சரியமும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தேன். எல்லாக் கட்டுரைகளும் சைவசமயப் பாரம்பரியங்களையும் கர்நாடக இசைப் பாரம்பரியங்களையும் ஆங்கிலச் சூழலில் வாழும் தமிழ் மக்கள் படித்து அறியக்கூடிய முறையில் தொகுத்த அளித்த ஆசிரியரைப் பெரிதும் பாராட்டுகிறேன். அருட்கூத்தன் ஸ்ரீ நடராஜர் படங்கள் என்னை மிகவும் கவர்ந்தன. இவ்விதழ் மேலும் இதே பாதையில் தொடர்ந்து முன்னேறி வெளிவர எனது வாழ்த்துக்கள்

திருமதி க சுந்தரலிங்கம்
Mitcham

காயத்ரி மந்திரம் யாரும் பாடலாம் என்று எனது குரு சொல்கிறார். நீங்கள் தவறு என்று சொல்கிறீர்களே! நான் தொடர்ந்து பாடுவேன்.

திரு நாதன்
Ilford

துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் பற்றி அருமையான குறிப்பு வெளியிட்டு தொண்டின் பெருமைக்கும் தொண்டரின் பெருமைக்கும் மதிப்பளித்திருக்கிறீர்கள்

திரு சோதி
Lewisham

சோதிடம் பற்றிய கட்டுரை பயனுள்ளதாக இருக்கிறது. தொடர்ந்து வெளியிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு ஜெயபாலன்
Carshalton

எழுத்துப் பிழையற என்றொரு புதிய பகுதியைக் கலசத்திலே பார்த்தேன். பிள்ளைகளுக்குச் சரியாகத் தேவாரம் சொல்லிக் கொடுக்க இந்தப் பகுதி உதவியாக இருக்கும். தேவாரத்தின் கருத்தையும் எழுதினால் நல்லது. தொடர்ந்து பிரசுரியுங்கள்.

திருமதி பாமா
Redbridge


உங்கள் குடும்பத்தின் பாதுகாப்பிற்கு
உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்
Select
Life Care
Protect the one thing
That's important to you
Your family.
Death Benefits
Critical illness benefits
Death or earlier critical illness benefits
Unemployment benefits
Disability income benefits
Level term assurance
Decreasing term assurance for mortgages
Select life care is an introducer to Select Mortgage Solution. Select Mortgage Solution is directly authorised and regulated by the financial services authority.
www.select.gb.com
0845 470 1500

# நல்லைநகர் ஆறுமுகநாவலர்

திருமதி.தமிழரசி ஜெயதாசன்




பூ மணக்க, பொழில் மணக்க, புனித நல்லூர் தான் மணக்க, பா மணக்க நல்லைகநரில் ஆறுமுகனார் அவதார புருஷனாகப் பிறந்தார். ஒரு நாட்டின் பெருமை அந்த நாட்டிலே தோன்றிய பெரியவர்களாலேதான் நிலைநாட்டப்படுகின்றது. நாவலர் அவர்கள் தோன்றிய காலத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் அறிவிழந்து போலியில் மயங்கி அந்நியர் ஆட்சிக்கு அடிமைப்பட்டிருந்த ஒரு காலமாகும். அப்போது பேச்சாலும், எழுத்தாலும் தன் பணியை நாவலர் விரித்தார்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே", "சிவனுண்டு பயமில்லை" என்பது அவருடைய தாரகமந்திரம். இந்தச்சரீரத்தை இறைவன் தந்தது சைவத்தை வளர்த்தற்குக் கருவியான கல்வியை வளர்த்தற்பொருட்டேயாம் என்று கூறத்தொடங்கிய நாவலர் கிராமங்கள் தோறும் பள்ளிகளை உருவாக்கினார். கிராமங்கள் தோறும் பாடசாலைகளை ஸ்தாபித்தார். நல்லைநகர் தந்த நாவலர் பெருமான் சிவநெறி வளர்த்த செம்மலாக, தமிழ் உரைநடையின் தந்தையாக, விடுதலைக்கு வித்திட்ட முன்னோடியாக, மக்கள் இயக்கத்தலைவராக பல்லோராலும் மதித்துப் பாராட்டப்படுபவர் என்றால் அவர்தம் சைவப் பணிக்கு அவருக்கு அவரே நிகராவர்.

இத்துணைச் சிறப்பு நலம் பொருந்திய நாவலர் பெருமான் பதினான்கு ஆண்டுகள் பாதிரிமாரின் சூழ்ச்சியில் அமர்ந்து இருந்து, தமது சமயத்தை வளர்த்தார் என்றால் அவர்தம் சைவத்தொண்டு பற்றிப் பேசவும் வேண்டுமா? குழந்தை ஆறுமுகனார் படித்தல், படிப்பித்தல் போன்றவற்றில் பதினான்கு ஆண்டுகள் உழன்று பாதிரிகளின் சூழ்ச்சிகளையும், மதமாற்றங்களையும் கண்டு சைவ உணர்வு உள்ளூர சைவம் வளர்க்க உறுதிபூண்டார். சுப்பிரமணியம்பிள்ளை தொடக்கம் சேனாதிராஜா முதலியார் பரியந்தம் கல்வி பயின்று தமிழ், ஆங்கிலம், சமஸ்கிரும் ஆகியவற்றை ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தார். சைவத்தை உயிராகவும், தமிழை உடம்பாகவும் எண்ணி இரவு பகல் பாராது மெய்வருத்தம் பாராது சைவத்தை வளர்த்தார்.

நாவலர் ஐயா இலகுவாகப் பொருள் விளங்கத்தக்க உரைநடைகளையும், கல்விக்கூடங்களையும், அச்சுவாகனங்களையும் முக்கிய கருவிகளாகக் கொண்டு கோயில்கள்தோறும், சாலைகள்தோறும், சைவமன்றங்கள் தோறும் சைவப் பிரசங்கங்கள் செய்தார். தாம் மட்டும் பிரசங்கங்கள் செய்யாது, தமிழ்மொழி வல்லாரைத் தெரிவு செய்து ஊர்கள் தோறும்,பள்ளிகள் தோறும் அரிய பெரிய பிரசங்கங்களைச் செய்வித்தார். மனிதருள் தெய்வமன்றோ எங்கள் நாவலர். கோயில் மடங்கள் தோறும் புராணபடனம் நடத்தினார். ஓதுவாரை நியமித்துத் தேவார திருமுறைகளைப் பண்ணுடன் ஓதுவித்தார்.

சிவனடியார்களையும், திருக்கோயில்களையும் மேலோங்க வைத்து சைவப்பணியாற்றிய ஒரேஒரு முதல்வன் எங்கள் நாவலரே. நாவலர் பெருமானை நாம் வணங்குவோம்.

# சடாமுடியில்...... ஓர் ஓவியம்

சோ.பத்மநாதன்



சிவபெருமானுடைய சடையைச் 'செஞ்சடை' என்று கூறுவது மரபு. அவன் நடனம் ஆடும் போது, விரித்த சடை தீக்கங்குகள் போலக் காட்சிதரும் என்று கவிஞர்கள் வர்ணிப்பர்.

இந்தச் சடையைத்தான் கொன்றையும் கங்கையும் பிறையும் அலங்கரிக்கின்றன. அவற்றைத் தொடர்புபடுத்திக் கற்பனைச் சித்திரம் ஒன்று தீட்டுகிறான் கவிஞன். தனக்குவமையில்லாத, சிறப்புப் பொருந்திய திருவாரூரில் வீற்றிருக்கும் சிவபெருமானுடைய சடைக்காடு எதைப்போல் இருக்கிறதென்றால், நெருப்புப்போல் எனலாம்.

'தன்னொக்கும் செல்வக் கமலைப்பிரான் செஞ்சடாடவிமற்று
என்னொக்கும் என்னில் எரியொக்கும்'

அது சாதாரண நெருப்பல்ல, பொற்கொல்லன் பொன்னுருக்கும் நெருப்பு! சடையிற் சொருகியிருக்கும் கொன்றைப்பூ பொன் போல் விளங்குகிறது. கொன்றையில் மொய்க்கும் வண்டு கரி போலக் காட்சி தருகிறது. (கொன்றை- மஞ்சள் நிறம் வண்டு- கறுப்பு நிறம்)

'கொன்றை எரியில் இட்ட பொன்னொக்கும், வண்டு கரியொக்கும்'

தமிழ்நாட்டிலே ஒரு வழக்கம் இருந்தது. பெண் தனக்குத் தேவைப்படும் பொன்னகைக்குப் பொற்கொல்லனிடம் நேரிலே போய் 'ஓடர்' கொடுப்பாள். அளவு, மோடி என்பன பற்றிய திருப்தி இருக்கும் அல்லவா?

சிவபெருமான் தலையில் இருக்கும் கங்கை நகை செய்விக்க வந்த பெண்ணாகத் தெரிகிறாள் கவிஞனுக்கு: 'கங்கையப் பொன்செய்விக்கும் மின்னொக்கும்'

எஞ்சியிருப்பது பிறை. பிறை வளைந்து இருக்கும். கூனற்பிறை என்ற தொடர் இலக்கியங்களில் அடிக்கடி வருவதுதானே!

இந்தப்பிறை வயதுபோன பொற்கொல்லனைப் போலக் காட்சி தருகிறது என்று கற்பனை செய்கிறான் கவிஞன். 'பொன்செய் கிழக்கொல்லன் ஒக்கும் அவ்வெண்பிறையே!'

ஆக, சிவன் சடையிற் சூடிய கொன்றையையும் கங்கையையும் பிறையையும் வைத்து ஓர் உயிரோவியம் தீட்டிவிடுகிறார் குமரகுருபரர். பாடல் இடம்பெறும் நூல் - திருவாரூர் நான்மணி மாலை.

'தன்னொக்கும் செல்வக் கமலைப்பிரான் செஞ்சடாடவிமற்று
என்னொக்கும் என்னில் எரியொக்கும் கொன்றை எரியில் இட்ட
பொன்னொக்கும் வண்டு கரியொக்கும் கங்கையப் பொன்செய்விக்கும்
மின்னொக்கும் பொன்செய் கிழக்கொல்லன் ஒக்கும்அவ் வெண்பிறையே!'

(கமலை - திருவாரூர்: சடாடவி - சடை+அடவி, அடவி- காடு)

# எழுத்துப் பிழையற...

இந்த இதழில் இன்னொரு ஒரு தேவாரமும் ஒரு திருப்பல்லாண்டும் வருகின்றன.

அப்பர் சுவாமிகள் சைவத்துக்குத் திரும்பியதும் அவரைக் கல்லோடு கட்டிக் கடலில் இட அவர் பாடிக் கரைசேர்ந்த தேவாரம் இது.

'சொற்றுணை வேதியன் சொதீ வானவன்' என்றும் 'கற்றுணைப் பூட்டியொர் கடலினிற் பாய்ச்சினும்' என்றும் 'கடலினுட் பாய்ச்சினும்' என்றும் பலவாறாகப் பாடுவது கேட்டிருக்கிறோம். சரியான தேவாரம் இதோ!

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

பொழிப்புரை: வேதம் வாயினாற் சொல்லப்படுவது. அதன் முதல்வர் சிவபெருமான். அவர் சோதி வடிவானவர். அவருடைய அழகிய பொலிவான திருவடியின்பால் எந்நெஞ்சைப் பதித்து வணங்க நல்ல துணையா விளங்குபவர். கல்லுடன் கட்டி என்னைக் கடலிலே போட்டபோதும் எனக்குத் துணையாக வந்தது நமசிவாய என்ற திருவைந்தெழுத்தே.

தத்துவக் கருத்தாகப் பார்த்தால் அந்தத் தேவாரத்திலே நாம் பிறவிப் பெருங்கடலை நீந்திச் சிவனை அடைய நமக்குத் துணையாக இருப்பது திருவைந்தெழுத்தே எனவும் கொள்ளலாம் அல்லவா?

பாலுக்குப் பாலகன் என்ற திருப்பல்லாண்டிலே 'ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாக' என்று பலரும் பாடுகிறார்கள்.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
    பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
    மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின் றசிற்றம்
    பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
    பல்லாண்டு கூறுதுமே

**கடந்த இரு இதழ்களிலும் வெளியான திருப்பாடல்களைப் பார்த்த சில அன்பர்கள் தங்களுக்கு இப்பகுதி மிகவும் பயனுள்ளதாக இருந்ததாகக் கூறினர்.**

# Thirukkural

## Refraining from Vain Speech

## பயனில சொல்லாமை அதிகாரம் 20

1. பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும்.

கேட்டோர் பலரும் வெறுக்கும்படி பயனற்ற சொற்களைப் பேசுபவன் எல்லோராலும் இகழப்படுவான்.
**He who speaks vain words to the disgust of many wise men will be despised by all.**

2. பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

பயனற்ற சொற்களைப் பலர்முன் பேசுதல் விருப்பமற்ற செயல்களை நண்பரிடத்து செய்தலைக் காட்டிலும் தீயது.
**Speaking vain words in the presence of many is worse than doing undesirable deeds unto friends.**

3. நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை.

பயனில்லாதவற்றை விரித்துரைக்கும் ஒருவனது வெற்றுரை அவன் அறமற்றவன் என்பதைக் காட்டும்.
**Empty words that are spoken by a man will portray that the man is worthless.**

4. நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து.

பயன்தராத பண்பற்ற சொற்களைப் பலர்முன் ஒருவன் பேசினால் அப்பேச்சு இன்பத்தோடு பொருந்தாததாய் அவனை அறத்தினின்று நீக்கும்.
**Words devoid of worth and refinement said in an assembly is improper and also degrades him.**

5. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

பயனிலவாகிய சொற்களை இனிமைப் பண்புடையார் பேசினால் சீரும் சிறப்பும் கெட்டுவிடும்.
**Even the worthy will lose honour and respect if they indulge in vain speaking.**

6. பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி யெனல்.

பிறர் பேசும் பொருளற்ற சொற்களைப் போற்றிக் கொண்டாடுபவனை மாந்தன் என்று சொல்லாதே. மாந்தர்களுள் பதர் என்று இகழ்க.
**Do not call him who persists in vain speaking, a man. Call him chaff among men.**

7. நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

சால்புடையவர் அறனல்லாத சொற்களைக் கூறினும் கூறுக. அவர் பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருத்தல் நன்று.
**Let the wise, if they deem fit, speak harsh words, but is good for them to refrain from speaking worthless words.**

8. அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல்.

மெய்ப்பொருளை ஆராயும் அறிஞர்கள் பெரும்பயன் விளைக்காத சொற்களைக் கூறமாட்டார்கள்.
**The wise whose thoughts are set on the solution to great problems will not utter words that are not full of significance.**

9. பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர்.

மயக்கம் தீர்ந்த குற்றமற்ற அறிவினை உடையவர்கள் பொருளற்ற சொற்களை மறந்தும் பேசமாட்டார்கள்.
**Men of spotless and delusion free wisdom, will never utter worthless words, even by oversight.**

10. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

பேசினாற் பயன்தரும் சொற்களைப் பேசுக. சொற்களுட் பயனில்லாச் சொற்களைப் பேசாதொழிக.
**From the vocabulary of words, speak those that are which are profitable. Utter not the vain words.**

தமிழ் உரை: முனைவர் சாரங்கபாணி

# கர்நாடக இசையில் தமிழ்ப் பாடல் ஆசிரியர்கள்

ரிஷி சர்மா

## M.M.தண்டபாணி தேசிகர் *(1908-1972)*

திருச்செங்காட்டங்குடியிலே பிறந்த இவர் தம் தந்தையான முத்தையா தேசிகரிடம் இசையையும் தேவாரத்தையும் கற்றார். பின் வயலின் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளையிடம் இசை பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசியராகவும் இசைத் துறையின் தலைவராகவும் பணியாற்றினார்.

இவர் பலதுறைகளிலும் சிறந்து விளங்கினார்--இசைக்கலைஞர், பாடல் ஆசிரியர், குரு, திரைப்பட நடிகர். பட்டினத்தார், நந்தனார், தாயுமானவர், மாணிக்கவாசகர், திருமழிசை ஆழ்வார் ஆகிய படங்களில் நடித்துள்ளார். தமிழ் இசை மறுமலர்ச்சியில் இவருக்குப் பெரும் பங்கு உண்டு. தமிழ் இசைச் சங்கத்தின் ஆதரவில் பல இசை நூல்களை வெளியிட்டார். இசையரசு, இசைப்பேரறிஞர் உட்பட்ட பல விருதுகளைப் பெற்றிருக்கிறார்.

இவரியற்றிய பாடல்கள் சில - உன்னையன்றி உற்ற துணை (பவானி), வேலனை (ஆந்தோளிகா), அஞ்செழுத்தினை நெஞ்சிலே (ராகவினோதினி), வேண்டும் தாயே (சாரமதி), ஆனைமுகத்தோனே (தேவமனோகரி), இசையின் எல்லையை (சுபபந்துவராளி) முதலியவை.

## ஹரிகேசவநல்லூர் முத்தையா பாகவதர் *(1877-1945)*

இள வயதிலேயே இசையினால் ஈர்க்கப்பட்டார். வித்வான்கள் சாம்பசிவ ஐயர், சபேச ஐயர் ஆகியோரிடம் இசை பயின்றார். தானம் பாடுதல் இவருடைய பலம், மேலும் ஹரிகதா காலட்சேபம் செய்வதிலும் வல்லவர். ஹரிகதைக்குப் பாடல்கள் இயற்றத் தொடங்கி, பின்னர் கிருதிகளும் இயற்றலானார். அதுவரைக் கேட்கப்படாத இராகங்களை உருவாக்கி, வர்ணம், தாரு, தில்லானா, கீர்த்தனங்கள் செய்தார். ஹிந்துஸ்தானி ராகமான சோகினியிலிருந்து ஹம்ஸானந்தியை உருவாக்கினார்(நீடு மகிமா). மேலும் மோகனகல்யாணி, வலஜி, புத்தமனோகரி, கௌடமல்லார் இவரது சில படைப்புக்கள்.

விருதுகள்--காயிகாசிகாமணி, சங்கீதகலாநிதி, கௌரவ முனைவர் பட்டம் முதலியவை.
இவரது சில படைப்புக்கள்--அம்பவாணி (கீரவாணி), ஆர்க்கும் அடங்கா (பேகடா), புவனேஸ்வரியாள் (மோகனகல்யாணி), கம் கணபதே(ஹம்ஸத்வனி), கிரிப்பிரியம் (கதனகுதூகலம்), ஹிமகிரிதனயே (சுத்ததன்யாசி), ஈஸ்வரி ராஜேஸ்வரி (ஆபேரி) முதலியவை,

## லால்குடி ஐயராமன்*(1930)*

தியாகப்பிரமத்தின் சிஷ்யப் பரம்பரையைச் சேர்ந்த ஸ்ரீ கோபால ஐயரின் மகனாவார். தந்தையிடம் இசை பயின்றார். தமது 12ஆம் வயதிலேயே பெரிய இசை வல்லுனர்களுக்கு வயலின் வாசிக்கலானார். கர்நாடக இசைக்கு ஏற்ப வயலின் வாசிப்பதற்குப் புதிய உத்திகளைக் கண்டு பிடித்தார். (லால்குடி பாணி). பற்பல கிருதிகள், தில்லானாக்கள், வர்ணங்கள், நாட்டியப் படைப்புகள் இவரது சிறப்பு.

கூட்டிசை இவர் அறிமுகம் செய்த ஒன்று. இவரது வீணா, வேணு, வயலின் கச்சேரிகள் பெயர் பெற்றவை. உலகில் பல நாடுகளில் இவரது வயலின் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன.
விருதுகள்--நாத வித்யா திலகம்(லால்குடியில்), நாத வித்யா ரத்னாகரம்(நியுயார்க்), சங்கீதசூடாமணி(சென்னை),பத்மஸ்ரீ, பத்மபூஷன் போன்ற பல விருதுகள்.
இயற்றிய சில கிருதிகள்--கந்தன் செயலன்றோ(நாட்டைக்குறிஞ்சி), தென்மதுரை (ஹம்ஸ ரூபிணி), நீ தயை(பேகடா)..

வர்ணங்கள்--திருமால் மருகா(ஆந்தோளிகா), தேவி உன் பாதமே(தேவகாந்தாரி), செந்தில் மேவும்(நீலாம்பரி), அங்கயற்கண்ணி(ராகமாலிகா)..மேலும் பல.

### G.N. பாலசுப்ரமணியம் *(1910-1965)*

மயிலாடுதுறை வட்டம் கூடலூரில் திரு G.V.நாராயணஸ்வாமி ஐயரின் மகனாகப் பிறந்தார்.அவருடைய தந்தையாரிடமும், மதுரை சுப்ரமண்ய ஐயரிடமும் இசை பயின்றார். இளமையிலேயே கபாலீஸ்வரர் கோயில் இசை விழாவில் பாடுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. அன்றையிலிருந்தே அவர் புகழ் பரவத் தொடங்கியது. அவருடைய இனிமையான குரலும், பாடும் பாங்கும், சரளமான பிருகாக்களும் மக்களிடை பிரபலமாயிற்று.

சகுந்தலா, பாமா விஜயம், வாசவதத்தா முதலிய படங்களில் நடித்துள்ளார்.

சுமார் 250 கிருதிகள் இயற்றியுள்ளார். சந்திரஹஸிதா, சிவசக்தி, அம்ருதபேகாக் ஆகிய புது ராகங்களையும் உருவாக்கினார். அவர் படைத்த சில பாடல்கள்--என் மனத்தாமரை (ரீதிகௌளை), கனவிலும் (ஸ்ரீரஞ்சனி), கவலையெல்லாம் (சரஸ்வதி), பராமுகம் (கானடா), உன்னடியே கதி (பஹுதாரி), மனமிரங்காதா (ரவிச்சந்திரிகா), சாமகான (ஹிந்தோளம்).

### பாபநாசம் சிவன் *(1890-1973)*

சிவன் போளகம் என்ற ஊரில் ஸ்ரீ ராமாமிருத ஐயருக்கும் யோகாம்பாள் அம்மாளுக்கும் மகவாய்ப் பிறந்தார். இயற்பெயர் போளகம் ராமையா. பலகாலம் பாபநாசத்தில் இருந்ததால் பாபநாசம் சிவன் என்ற பெயர் வந்தது. 2000க்கு மேற்பட்ட பாடல்களை இயற்றியுள்ளார். மகாவைத்யநாதருடைய பாணி சிவனுடைய பாடல்களில் இருப்பதாகக் கருதப்படுகிறது.
அம்பிகாபதி, நந்தனார், சகுந்தலை, சாவித்திரி, சிவகவி, தியாகபூமி போன்ற படங்களுக்குப் பாடல் எழுதியுள்ளார். தமிழ் தியாகராஜர் என்று அழைக்கப்படுகிறார்.
இயற்றியுள்ள பாடல்களில் சில--என்ன தவம் செய்தனை (காபி), கார்த்திகேய காங்கேய (தோடி), கா வாவா (வராளி), மா ரமணன் (ஹிந்தோளம்), மூலாதார மூர்த்தி (ஹம்ஸத்வனி), நான் ஒரு விளையாட்டுப் பொம்மையா(நவரசகனடா), ஸ்ரீநிவாச திருவேங்கட (ஹம்ஸானந்தி), தத்வமறிய தரமா (ரீதிகௌளை), துணை புரிந்தருள் (சுத்தஹிந்தோளம்), நெக்குருகி (ஆபோகி), பராத்பரா (வாசஸ்பதி), சரவண பவ குகனே(மத்யமாவதி).

### மு.ராமராஜ் *(1936)*

ரங்கூனில் திரு கிருஷ்ணபாகவதருக்கும், லட்சுமிக்கும் மகவாய்ப் பிறந்தார். இது ஒரு சங்கீதக் குடும்பம். திரு ராமராஜின் இசை வளர்ச்சிக்கு உதவியவர்களில் சிலர்- தஞ்சாவூர்

**கல்யாணராமன், முடிகொண்டான் வெங்கடராம ஐயர், நேதுநேரி கிருஷ்ண மூர்த்தி, வேலட்டி வெங்கடேஸ்வரலு ஆகியோர். இவர் பல அபூர்வ ராகங்களைப் பயன்படுத்தி 200க்கும் மேற்பட்ட பாடல்கள் இயற்றியுள்ளார். இவருடைய பாடல்களில் ஒருசில - ஆதி அந்தம் இல்லை (ஜோதிஸ்வரூபிணி), அன்னையே நின் பாதம்(கமாஸ்), கமக எழில் கமழும் (நாட்டைக்குறிஞ்சி), இன்னமும் என்னை (சாருகேசி), கருணையின் திருவுருவே (திலங்), குமரேசன் (விஷ்ணுப்ரியா), மால் மருகனை (நீலமணி), மார்க்கம் தந்தருள் (ஷட்விதமார்கினி).**



## திரு குன்னக்குடி அவர்கள்

பிரபல இசையமைப்பாளர் ஜி இராமநாதன் முன்னால் ஒரு பன்னிரண்டு வயதுச் சிறுவன் தன் வயலினுடன் வந்து நிற்கிறான். தன்னை திரையுலகில் அறிமுகப்படுத்தக் கோருகிறான். அதற்காக அந்தச் சிறுவன் சாருகேசி இராகத்தை மிக அழகாக வாசித்து ஒரு கீர்த்தனையையும் வாசிக்கிறான். 'இத்தனை திறமையுள்ள நீ எதுக்கு சினிமாவுக்கு வர ஆசைப்படுறே! பேசாம கச்சேரி பண்ணு' என்கிறார் ஜி இராமநாதன். உடனே 'மன்மத லீலையை' என்ற திரைப்படப் பாடலை வாசித்துக்காட்டி திரு ஜி இராமநாதனை அசத்திய அந்தச் சிறுவன்தான் பின்னாளிலே 'வா ராஜா வா', 'தோடிராகம்', 'தெய்வம்' போன்ற பல திரைப்படங்களில் இசையமைப்பாளராக முத்திரை பதித்த திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள். கர்நாடக இசையிலும் அரியக்குடி, செம்மங்குடி, மகாராஜபுரம் என்று பல பிரபல இசை மேதைகளுக்குப் பக்கவாத்தியம் வாசித்த பெருமை திரு குன்னக்குடி அவர்களுக்கு உண்டு. திருவையாறிலே ஆண்டுதோறும் ஸ்ரீதியாகராஜ சுவாமிக்கு நடக்கும் ஆராதனை விழாவை முக்கிய பங்கேற்று நடத்திய சிறப்பும் இவருக்கு உண்டு. பண்டிதர் முதற் பாமரர் வரை இசையை யாரும் ரசிக்கவைத்த திரு குன்னக்குடி இன்று அமரராகிவிட்டார் அவரின் திருநீறும் குங்குமமும் நிறைந்த முகத்தை இனித் திருவையாறிலே பார்க்க முடியாது எனும்போது மனம் கனக்கிறது.



## திரு கானமூர்த்தி அவர்கள்

கானமூர்த்தி என்றவுடன் மேளகர்த்தாவில் மூன்றாவது இராகம் என்று மனதில் நினைவு வரும். ஆனால் ஈழத்தில் இசைத்தொண்டு புரியும் கலைஞர்கள் வரிசையில் முக்கிமானவர் திரு கோ கானமூர்த்தி அவர்கள். தன் சகோதரர் திரு பஞ்சமூர்த்தி அவர்களுடன் நாதஸ்வர இரட்டையர்களாக பல கச்சேரிகளைச் செய்த பெருமை இவருக்கு உண்டு. தவில்மேதை தட்சணாமூர்த்திப்பிள்ளையின் அண்ணன் மகன் இவர். ஈழத்திலன்றி மலேசியா, சிங்கப்பூர் போன்ற கிழக்கு நாடுகளிலும் சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து போன்ற மேற்கு நாடுகளிலும் இவர் இசை பரப்பியுள்ளார். மாமனாரிடம் கற்கத்தொடங்கிய இவர் மாவிட்டபுரம் திரு இராசா அவர்களிடம் தன் இசையை மெருகேற்றினார். நீண்ட இவரது இசைப்பயணத்தில் இவரை இலங்கை கலாசார அமைச்சு 'கலாபூஷணம்'' விருது கொடுத்துக் கௌரவித்தது. தமது அறுபதாவது வயதிலே இவர் அண்மையில் இறைபதம் எய்தினார்.

# வழிபட நேரமில்லை?!

-இடைக்காடு சயம்பு-

## புலம்பெயர்நாடுகளிலே வாழும் சைவர்களுக்கு வீடுகளிலே செய்யப் பொருத்தமான சுருக்கமான சிறப்பான வழிபாட்டு முறை

*மற்றுநீ வன்மை பேசி வன்றொண்டன் என்னும் நாமம்*
*பெற்றனை நமக்கும் அன்பிற் பெருகிய சிறப்பின் மிக்க*
*அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச்*
*சொற்றமிழ் பாடு கென்றார் தூமறை பாடும் வாயான்*

இந்தப் பாடல் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் பாடியது. சேக்கிழார் சான்றுகளில்லாமற் சரித்திரம் எழுதமாட்டார் நாயன்மார்களுடைய சரித்திரங்களுக்கு சிறப்பாகத் தேவார முதலிகளின் சரித்திரங்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களிலே கண்டசான்றுகளை வைத்தே சரித்திரங்களைப் பாடினார். தேவாரங்களை முழுமையாகப் படித்தால் இது விளங்கும்.

மேலே குறிப்பிட்ட பாடலைப் பார்ப்போம். மணமகனாய் நின்ற அந்தண இளைஞன் ஆரூரனை, இறைவர் அந்தணமுதியவராய் வந்து 'நீ என் அடிமை, இந்த வாழக்கை முடித்துக் கொண்டுதான் நீ திருமணக் கிரியைகளில் இறங்கலாம் என்றார். இளைஞன் ஆரூரனும் மறுத்து 'நீபித்தன், பழைய மன்றாடி' என்று வன்மை பேசினான். நீதி மன்றில் முதியவர் வென்றார். ஆரூரன் முதியவரைப் பின்தொடர்ந்து போக முதியவர் கோயிலுக்குள் புகுந்து மறைந்து விட்டார். பின் இறைவர் காட்சிகொடுத்த ஆரூரனுக்கு முன்னைய நிலைகளை உணர்த்தி, நீ எனக்குத் தொண்டு செய்வாயாக என்று மேற்கூறிய பாடலில் உள்ள கருத்துப்படக் கூறி அருள் புரிந்து 'வன்றொண்டன்' என்னும் சிவதீக்கைப் பெயருங்கொடுத்தார். வன்றொண்டன் என்றதற்கு ஆதரமாகச் சுந்தரமூர்த்திசுவாமிகள் ஒன்பது இடங்களில்(நான்பார்த்த அளவில்) 'வன்றொண்டன்' என்று குறிப்பிட்டிருக்கிறார். முதலாவதாகக் குறிப்பிட்டது அவரது பிறந்த தலமாகிய திருநாவலூரிலே, பாடலில் 'வன்தொண்டன் என்பதோர் வாழ்வு தந்தார்' என்று பாடிச் சான்று தந்திருக்கிறார். இறைவர் மேலும் ஆரூரருக்கு அருளினார். 'எனக்கு நீ செய்ய வேண்டிய தொண்டு பாடுவதுதான். அர்ச்சனை பாட்டேயாகும்' என்றார். இங்கே அர்ச்சனை என்பதன் பொருள் சிவதொண்டின் தொகுப்பு. எல்லா விதமான சிவதொண்டுகளின் பயனும் தோத்திரப் பாடல்களிலே அமைந்து விடும் என்று உணர்த்தினார். 'சிறப்பின் மிக்க அர்ச்சனை பாட்டேயாகும்' என்றார். "ஆகையால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்பாடு என்றார்" பாடப்பாட அன்பு பெருகும். ஆதலால் நீ பூவுலகில் வாழும் வரையும் என்னைத் தமிழாற் பாடுக என்றார். நான் வேதத்தை வடமொழியில் ஓதினேன். நீ அதை எனது உரையாகத் தமிழிலே ஓதிவை என்றார். தூமறை பாடும் வாயால். நாயனார் பூவுலகில் இருக்குமட்டமல்ல ஆகாயத்தில் வெள்ளையானை மீதமர்ந்து திருக்கைலாயம் போய்ச் சேரும் வரையும் தமிழைப் பாடினார்.

கோயில்களிலே சிவாசாரியார்கள் மந்திரங்களை உச்சரித்துப் பூசை செய்வார்கள். உச்சரிப்பு முக்கியம். அதனால் ஏற்படும் பயன் திருமுறைகளைப் பண்ணோடு பாடினால் கிடைக்கும் பண்ணோடு பாடமுடியுமானால் சிறப்பு. பண்ணிசை தெரியாதவர்களும் இசையுடன் பாடினால் போதும். இதற்கும் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஒன்றுக்கு மேற்பபட்ட இடங்களில்

"நீங்கள் எப்படியாவது பாடுங்கள். பலன் கிடைக்கும் என்று வாக்குறுதி தந்திருக்கிறார். கீதங்கள் தோத்திரங்கள் பாடுங்கள் என்றும் நாயன்மார்கள் சொல்லியிருக்கிறார்கள். தேவாரங்களில் ஏராளமாகக் குறிப்புக்கள் உள்ளன. கீதங்கள் தோத்திரங்கள் என்றால் திருமுறைகள் பன்னிரண்டு என்று வகுக்கப்பட்ட காலத்துக்குப் பின் வந்த ஞானப்பாடல்கள். அருணகிரிநாதர், தாயுமானர் முதலிய ஞானிகளின் பாடல்களும் திருமுறைகளுக்குச் சமமாம்.

மேலை நாடுகளில் முறையாகப் பூசை செய்ய வீட்டு வசதியோ நேரமோ போதாது. தீபம், தூபம் காட்டுவதும்-இங்குள்ள சட்டங்கள், அயலவர், சூழல், காப்புறுதிச் சட்டங்கள் இவற்றை நோக்கினால் சிக்கல். இன்னொன்று, இந்த நாடுகளிலே பூசைக்கு உகந்த பூக்கள் கிடைப்பது அரிது. கடையில்வாங்கும் பூக்கள் கோவிலுக்குக் கொடுப்பதோ வீட்டில் பூசை செய்வதோ கூடாது. அன்று மலரும் நறுமணமுடைய பூக்கள் தான் பூசைக்கு எடுக்க வேண்டியவை. தொடர் மாடிகளில் இருப்பவர்களுக்கு மலர்கள் இலைகள் பற்றி எந்த வாய்ப்பும் இருக்காது. வீடும் தோட்டமும் உள்ளவர்கள் பூக்கள் இலைகள் எடுக்கக் கூடியதாகப் பயிர்களை வளர்க்கலாம். றோசா ஆறு மாதங்களுக்குப் பூக்கொடுக்கும். கொடி மல்லிகை போல் ஒரு கொடி இருக்கிறது. அது நான்கு மாதங்கள் பூக்கொடுக்கும். பின் இலைகள் எடுத்துப் பூசை செய்யலாம். மூன்று நான்கு மாதங்களுக்கு இலையும் இருக்காது. லவெண்டர் (Lavender) எப்போதும் இலைகொடுக்கும். நறுமணமுடையது. கடவுளின் கிருபையால் எனக்கு இங்கே இந்த வாய்ப்பு இருக்கிறது.

**இங்குள்ள கோயில்கள்-மேலைநாடுகளில் ஆகமமுறைப்படி கட்டப்பட்டவை அல்ல. நிலத்திலே அமைந்த கோயில்களுக்குக் கருவறை முறையாகக் கட்டியிருக்கக் கூடும். உள் வீதியில் அமைத்த பிரகார மூர்த்திகள் நாம் வீட்டிலே கும்பிடுவதைப் போலவே இருக்கின்றன. இவற்றை மடாலயங்கள் என்றே கூறலாம். மேல் மாடிகளில் அமைந்த கோயில்களைக் கோயில்கள் என்று சொல்ல முடியாது. வழிபாட்டு இடம் என்ற மட்டில் அமையாலாம்.**

நைவேத்தியம் வைத்துக் கும்பிடலாம். நாளாந்த வழிபாட்டுக்கு முந்திரிகை வற்றல் பேரீந்துப் பழம் போன்றவை வைக்கலாம். சிறப்பான நாள்களில் எங்கள் வசதிபோல் பால், அமுது வைத்துக் கும்பிடலாம். நவராத்திரி நாள்களில் இன்னும் சிறப்பாகச் செய்யலாம். எங்கள் சமயத்தில் அடிப்படைக் கொள்கைகள் தவிர மற்றவற்றுக்குக் கட்டாயம் இல்லை. ஆனாலும் வழிபாடு காலை மாலை செய்ய வேண்டும். முடிந்தமட்டில் திருமுறைகளோ பாடல்களோ மந்திரங்களோ நாவில் இருக்கவேண்டும். இதுவும் வழிபாடுதான். பூசைப்பாத்திரங்கள் செம்பு பித்தளை தான் உபயோகிக்கவேண்டும்.

திருமுறைகள் கீதங்கள் ஓதியே வழிபடுவது பொருத்தமான சுருக்கமான சிறந்த முறையாகத் தெரிகிறது. நாயன்மார்கள் மிகவும் விதந்து சொல்லியிருக்கிறார்கள். பாடல்களையே மலராகவும், மாலையாகவும் இறைவருக்குச் சாத்தி வழிபட்டிருக்கிறாரர்கள். இந்தமுறை வழிபாடு சுருக்கமானது. நேரம், பணம் சுருக்கம். வீடானபடியால் எப்படியும் கும்பிடலாம். முகங்கழுவி விபூதி சந்தனம், குங்கும் தரித்துப் பாடவேண்டியது. மந்திரங்கள் தெரிந்தவர்கள் ஓதலாம். திருமுறைகள் கீதங்கள் பாடலாம். இனி பாடவேண்டிய திருமுறைப் பாடல்கள் பற்றி மாதிரிக் குறிப்பு கீழே தருகின்றேன்.

திருப்பாடல்கள்: மூவர் தேவாரப் பாடல்களிலும் ஒவ்வொன்று - 3, திருவாசகம், எட்டாந் திருமுறை 1, திருவிசைப்பா- திருமுறை-9 -1, திருப்பல்லாண்டு- திருமுறை-9-1, திருப்புராணம்- திருமுறை -12 -1

இந்த ஐந்து திருமுறைப் பாடல்களும் பஞ்சபுராணம் எனப்படும். கோயில்களிலே பூசை முடிவாக பஞ்சபுராணங்கள் ஓதப்படுகின்றன. இவை பாட ஏழுநிமிடங்கள் ஆகும். மேலும் நேரம் இருந்தால் பத்தாந் திருமுறை- திருமந்திரத்தில் ஒரு பாடல், பதினோராந்திருமுறையில் காரைக்கால் அம்மையார் பாடல் ஒன்று, கழறிற்றறிவார் நாயனார் பாடல் ஒன்று பாடலாம். அருணகிரி நாதர் திருப்புகழ் முதலியன பாடலாம். இவை நான்கு பாடல்கள். எல்லாமாக பதினொரு பாடல்கள். நேரம் பதினொரு நிமிடங்கள் போதும். மனத்தளவில் உங்கள் வரங்களைக் கேளுங்கள். ஆக இருபத்தைந்து நிமிடங்கள் போதும் நம்பிக்கையோடு இப்படிச்செய்து பாருங்கள் பலன் உண்டு.

மாதமொரு முறையவாது கோயில் வழிபாடு நல்லது. இங்குள்ள கோயில்கள்-மேலைநாடுகளில் ஆகமமுறைப்படி கட்டப்பட்டவை அல்ல. நிலத்திலே அமைந்த கோயில்களுக்குக் கருவறை முறையாகக் கட்டியிருக்கக் கூடும். உள் வீதியில் அமைத்த பிரகார மூர்த்திகள் நாம் வீட்டிலே கும்பிடுவதைப் போலவே இருக்கின்றன. இவற்றை மடாலயங்கள் என்றே கூறலாம். மேல் மாடிகளில் அமைந்த கோயில்களைக் கோயில்கள் என்று சொல்ல முடியாது. வழிபாட்டு இடம் என்ற மட்டில் அமையாலாம். ஆனாலும் கோயில்களுக்குப் பலரும் போய் வழிபட்டு-மனதை அடக்கிவழிபட்டு கோபம் முதலிய ஆறு பகைகளையும் ஒரு சிறிது நேரமாவது கைவிட்டுப் புனிதமாய் நிற்கிற படியால் அங்கே ஒரு சாந்தியும், ஆன்மிகத்தை வளர்க்கக்கூடிய சக்தியும் மந்திரங்களின் ஓசை, இயங்களின் ஒலி கலந்த காற்றும் பரவி நிற்கும். ஆனபடியால் கோயில் வழிபாடு செய்ய வேண்டும்.

அடியவர்களுடன் கூடியிருக்க வேணுமென்று திருமுறைகளிலே நிறையப் பாடி வைத்திருக்கிறார்கள். மாணிக்க வாசககசுவாமி இப்படிச் சொல்லி வைத்தார்.

"அடியார் நடுவுள் இருக்கும் அருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியாமுதலே என் கருத்து முடியும்வண்ணம் முன்னின்றே"

ஒவ்வொரு உயிரும் அதனதன் அளவில் உயர்ந்தததுதான். நம்முடைய சட்டைப் பையிலே பணம் வைக்கிறோம். நாம்தானே எடுக்கவேண்டும்? வேறொருவர் எடுத்தால் தவறுதானே? அதைப்போல, கோழி, மான் போன்ற பிராணிகளின் உடம்பினுள் உயிரை நாம் வைக்கவில்லை. அந்த உடல்களிலிருந்து நாம் வைக்காத உயிரை எடுக்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது?

நம் பெட்டியில் நாம் வைத்த பணத்தை வேறு ஒருவர் எடுத்தால் எப்படித் தண்டிக்கப்படுவாரோ, அதைப்போலப் பிற பிராணிகளின் உடம்பில் யாரோ வைத்துள்ள உயிரை நாம் எடுப்பதும் தண்டனைக்குரிய செயல்தானே?

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாருங் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நகரத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே

திருமந்திரம்

மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து, இறைமையை உணர்ந்து அம்மயமான திருமூலர் நாயனார் புலால் உண்பவரைப் புலையர் - கீழ்மக்கள் என்கிறார்.

நன்றி - தமிழ்வேதம் மார்ச் 2008

# To Eat or Not to Eat Meat

## Right to Live By Maneka Gandhi

Last week I came across this very interesting debate and I thought you should read it. A Contemporary Moral Issues class at the University of Wisconsin-Madison took up the one issue being debated fiercely across the world: to eat or not to eat meat. These are the main arguments, for and against, that were brought up.

**1. The Bible Argument:**
"The Bible says we shall have dominion over the animals and I take that to mean that we can eat meat and use animals however we want. Therefore, we can eat meat."

**Objection 1:**
If one takes what the Bible says to support one's position, one will have to believe that a wife must submit to her husband, homosexuals are immoral, rebellious sons must be stoned to death publicly, women are tempted by snakes etc. People tend to pick and choose what parts of any religious text they want and twist it to suit what they want to do.

**Objection 2:**
What is intended by "Man shall have dominion over the animals" is subject to interpretation. What is intended could be,"Do whatever you want to the animals, like torturing, eating, bestiality, etc.", but "Since I made humans with more reason than the rest of the animals on earth, it will be up to you to see that they are cared for." Why would God want an interpretation of violence rather than love? Parents have dominion over their children; but this does not imply that we can torture or kill or eat them.

**Objection 3:**
If you interpret the Bible as encouraging you to eat animals then are all the other holy Books such as the Qur'an, Rig-Veda, Dhammapada, Taoist texts, Book of Mormon, etc., wrong?

**Objection 4:** There is a clear direction in the Bible to eat vegetables,grain and fruit only: In Genesis 1:29, God says to Adam and Eve, "I have given you every herb bearing seed, which is upon the face of all the earth, and every tree, in the which [sic] is the fruit of a tree yielding seed; to you it shall be for meat."It says that man shall have dominion over the animals, but it doesn't say there that we shall have them for food, as it does of fruits and vegetables.

**2. The Tradition Argument:**
"I've been brought up eating meat and never questioned it. Our culture accepts eating meat as well. Therefore, I should be able to eat meat."

**Objection 1:**
The fact that one has been raised to eat meat is more of an explanation of why the meat-eating started, but cannot justify the claim that eating meat is ethically good. What if one were raised to hit people on the heads with hammers? To use more real examples: "My culture states that people of colour are inferior." And, "My culture states that women should be submissive and stay at home." These statements reflect the predominant opinion at one time. Are we to accept them as "proper" forever?

**Objection 2:**
Everything a culture accepts may not be ethically good, e.g., slavery, thuggery, killing girl children, etc. Once you see there is no valid reason to continue current behaviour , this is immoral

**Objection 3:**
This argument allows us to eat humans: All that is required is that one is raised in a cannibalistic tradition.

**3. The Taste Argument:**
"I love the way meat tastes. I won't deprive myself of this. Therefore, I should be able to eat meat."

**Objection 1:**
This argument leaves open the possibility that a person can say, "I love the way human meat tastes." This principle is an argument to eat anything and treat the victim as badly as you like.

**Objection 2:**
Think about what it would sound like to argue as follows: "I like the way it sounds so I don't see why I should give it up," when someone asks you why you're hitting infants on the head with a hammer. Or, "I like the way it smells when I burn human flesh!" One who makes this argument leaves open the possibility that any sensation that brings pleasure is something that it's OK to enjoy, no matter what it entails to enjoy it! "I have fun when I beat my wife after drinking."

**Objection 3:**
Taste is also linked with or caused by tradition: In the Northeast eating dogs is common but a goat is a pet. Imagine being told, have some dead dog on a bun, its great.

**Objection 4:**
If this argument can justify current practices of raising and killing non-human animals for food, then it justifies raising humans for organs in the same way.

**4. The Teeth Argument:**
"Our teeth are made for eating meat. All animals that have teeth like ours eat meat. So we should be able to eat meat."

**Objection 1:**
Just because our anatomy is able to do something does not imply that we should do that thing, or that it is morally acceptable to do it. Biologically, I am able to spit. But it is not considered acceptable to spit in other peoples' faces. Hitting or torturing people is another example. Eating human babies is another thing you can do. But will you?

**Objection 2**:
Our teeth aren't really "made" to eat meat. We cannot, for example, walk up to a cow or pig and start gnawing. We have molars like vegetarian animals and not canines. Moreover, we'd acquire lots of diseases if we were to eat uncooked meats.

**Objection 3:**
If biologically my teeth can eat meat, then this argument does not give us any moral reason to not eat humans .

**5. The Nutrition Argument:**
"We need the protein that is provided in meat. Therefore, we should be able to eat meat."

**Objection 1:**
What if I want to get my protein from human flesh? This argument allows us the moral reason to eat humans.

**Objection 2:**
Protein is necessary, but getting protein from animals, dairy products and eggs is not necessary. Why kill animals if it is not necessary? Whole grains, vegetables, fruits, and legumes give you much better protein.

**6. The Darwinian Argument:**
"The process of evolution has placed humans, the stronger, in a position to be able to use the weaker (non-human animals) for our eating and other pleasures. Other animals besides us eat meat (i.e., other animals) – are they immoral? It's a natural instinct we have to eat meat. Therefore, we should be able to eat meat."

**Objection 1:**
If the stronger are always able to use the weaker however they please simply because they are more powerful, then we are in trouble. This argument justifies child abuse, killing infants, the senile, retarded etc. This is an "anything goes" principle, which cannot be limited to only include non-humans?

**Objection 2:**
Other animals act solely on natural instincts, and in the wild, must kill what they're killing in order to stay alive. We are not in a situation where (1) we can only act from natural instincts and (2) it is necessary to eat non-human animals. We should question this "animal instinct" in ourselves – that is what makes us different.

**7. The A-moral Beings Argument:**
"Non-human animals cannot morally question their actions like humans can, and this is what makes humans special. If beings cannot question how they live, then they have no intrinsic worth or rights. Therefore, we should be able to eat them."

**Objection 1:**
Non-human animals are not the only beings who cannot question how they live/act: fetuses, infants, comatose, senile, or severely retarded persons cannot as well. How can we then claim that these beings have intrinsic worth or rights? If one responds, "because they have value to other humans," then what about humans that no one cares about ?

**Objection 2:**
It's ironic that one would argue that humans are moral beings and can question what they do, and argue that this morality gives us the reason to treat non-human animals badly and kill them because they lack this power. This power is what makes us have a greater, and not a lesser, responsibility to other beings.

**8. The Intelligence/Rationality Argument:**
"Humans are more intelligent and more rational than non-humans. These characteristics give us the right or opportunity to be able to use non-humans for food. Therefore, we should be able to eat meat."

**Objection 1:**
There are unintelligent, irrational humans – they cannot eat meat? Can we eat them?

**Objection 2:**
If we are more intelligent and rational than non-human animals, then we should be able to understand what is not good for us or the world at large – and there are far more reasons to not eat meat than to eat it.

Courtsey: The Island & London Sapari

# கோளூண்ணிக்கரை பகவதி அம்பாள் கோயில்

கேரள பயணக்கட்டுரை

Dr க. கதிர்காமநாதன்



இக் கோயிலைப் பற்றி கேரள மக்கள் விசேட அபிப்பிராயம் கொண்டுள்ளனர். கொச்சின் பிரதேசகத்தில் ஒரு கிராமத்தில் அமைந்துள்ளது. கோயிலை அடைய முன்னர் பசுமையான குன்றுப் பிரதேசங்களையும், வாவிகளையும் தென்னை மரங்களையும் காணலாம். உயர்ந்த இடத்தில் அமைதியான சூழ்நிலையில் தரிசிக்கலாம். பிரதான வாசல் மேற்கு என்றாலும், மக்கள் வடக்கு வாசல் மூலம் சென்று கிழக்கு நோக்கியிருக்கும் அம்மனை வழிபடுவர். கோயிலின் கூரை கேளரமுறைப்படி அமைந்தாலும் சற்றுத் தாழ்வாகவே காணப்படுகிறது.

அம்மன்: பகவதி அம்மன் ஏனைய விக்கிர கங்களைப்போன்று திடமான மேடையில் அல்லது கல்லில் பிரதிஷ்டை பண்ணாமல் அதிசயமாக சொரியல் மண்மீது வீற்றிருக் கிறன்றாள். இதனால் அபிடேக நீர் யாவும் கீழே நிலத்தில் செல்கிறது. பகவதி அம்மனுக்கு நான்கு கைகள். வலது மேற்கையில் சக்கரமும், இடது மேற்கையில் சங்கும் கொண்டு அருள் பாலிக்கின்றார். விஷ்ணு பக்கத்தில் இருப்பதால் மக்கள் "அம்மே நாராயணா தேவி நாராயணா" லக்ஷ்மி நாராயாணா" என்று கூறுவார்.

இவற்றை விட அம்மன் காலை நேரத்தில் வெள்ளை நிற ஆடை அணிந்து சரஸ்வதி ரூபமாகவும், மதிய வேளையிற் சிவப்பு உடைஅணிந்து துர்க்கா தேவி ரூபமாகவும், மாலைப் பொழுதில் நீலச் சேலை அணிந்து லட்சுமி ரூபமாகவும் தோன்றுகிறார்.

